
முரசொலி
5-ம் ஆண்டு

# மானம் காக்கும் மரபினரின் வாழ்வு காக்க வேண்டாமா?

அன்றொரு நாள் அணி தேர் புரவி, ஆட்பெரும் படையுடன் தமிழகத்து வேந்தர்கள் அரசாண்டு கொண்டிருந்த காலத்தில், தமிழக மண்ணில் விளைந்த பஞ்சைக் கொண்டு நெய்த நெஞ்சை அள்ளும் ஆடைகள் அயல் நாட்டுக் கயல்விழி மாதர்களின், பொங்கி எழும் பெரு நிலவின் சாயல் கொண்ட தங்க நிற மேனியை எல்லாம் அலங்கரித்திருக்கிறது என்று வரலாறு கூறும் செய்தியைப் படிக்கும்தோறும் நம் இதயம் பெருமையால்—கர்வத்தால் விம்மத்தான் செய்யும்.

தமிழகத்தின் தலைசிறந்த—கலைத்திறன்வாய்ந்த ஆடைகளை அயல் நாட்டார் போட்டி போட்டு வாங்கினார்கள்; ரோமாபுரிக்கும், கிரேக்கத்திற்கும் ஆடைகளைச் சுமந்து சென்ற நாவாய்கள் தமிழகத்தின் கடற்கரையிலிருந்து புறப்பட்ட நாவாய்கள்—என்றெல்லாம் பண்பாடுகிறது நமது காப்பியங்கள்!

எலி ரோமத்திலும், ஆட்டு ரோமத்திலும் ஆடைகள் நெய்த பெருமை தமிழகத்தைத்தான் சாரும்!

பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே பாம்புச் சட்டை போன்ற மெல்லிய பளபளப்பான ஆடைகளைத் தமிழகத்து நெசவாளர்கள் நெய்தார்கள் என்ற புகழ் ஒளி இன்றும் உலகெல்லாம் சுடர் விட்டுப் பிரகாசிக்கிறது!

அத்தகைய கீர்த்தியும், பேரும், புகழும், பெருமையும் பெற்ற பரம்பரையினரின் இன்றைய நிலை என்ன?

கோபுரத்தின் உச்சியிலே கொடி கட்டிப் பறந்த தமிழக நெசவாளர்கள் இன்று குப்பை மேட்டிலே நின்று கதறுகிறார்கள்!

பண்டைப் பெருமையை பாருக்கெல்லாம் பறைசாற்றும் வாரிசுகளின் நிலையை நினைக்கும்போது நமது கண்கள் கண்ணீரால் மறைகின்றன—இதயத்தை வேதனை அரிக்கிறது!

இந்த நல்லவர்கள் வடிக்கும் கண்ணீர் ஓயாதா; நெஞ்சம் குளிராதா; அவர்களின் இருண்ட வாழ்வில் புத்தொளி வீசாதா—என்று நாட்டிலுள்ள நல்லவர்களெல்லாம் கேட்கிறார்கள்.

ஆனால் இந்த அரசாங்கம் அவர்களின் கண்ணீரை நிரந்தரமாகத் துடைக்கும் பணியில் ஈடுபடவில்லை. அதற்குப் பதிலாக கைத்தறியையே நம்பி இருக்கும் ஆயிரக் கணக்கான நெசவாளர்களின் வாழ்வை நசுக்கும் நாசவேலையில் ஈடுபட்டிருக்கிறது!

தென்னகத்திலே இருப்பதைப் போலவே கைத்தறியாளர்கள் இந்த இந்திய உபகண்டத்தின் முழுவதிலும் பரவி இருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது. ஆனால் தமிழகத்தில் கைத்தறியாளர்கள்—வடநாட்டில் ஆலை முதலாளிகள்! இரண்டும் இருமுனைகள்—இரு துருவங்கள்!

விந்தியத்திற்கு அப்பால் புகை கக்கும் ஆலைகள்! விந்தியத்திற்குக் கீழே உலை ஏற்றக் கூட வகை இல்லாத நிலை!

வடநாடு முழுவதும் ஆலைகள் நிரம்பி இருப்பதால் அதைப் பாதுகாக்கும் பணியிலே ஈடுபட்டிருக்கிறது டில்லி அரசாங்கம். ஆகவே தென்னகத்தின் நெசவாளர்களின் கண்ணீரை—வேதனையைப் போக்க அதற்கு அக்கறை இல்லை; சென்னை அரசாங்கத்துக்கோ 'வக்'கில்லை!

நாளுக்கு நாள் ஆலைகளில் உற்பத்திப் பெருகிக்கொண்டிருப்பதால் நெசவாளர்களின் வாழ்வு நாளுக்கு நாள் தேய்ந்து வருகிறது. ஆயிரக் கணக்கான நெசவாளர்கள் பசியுடன் போராடிக்கொண்டிருக்கின்றனர். குதூகலமும், மகிழ்ச்சியும் பொங்கிக்கொண்டிருந்த குடும்பங்களிலே கண்ணீர்—கதறல்—புலம்பல்! இதை நாடறியும். ஆனால் இவர்களின் அவலத்தைப் போக்கத்தக்க மருந்தளிக்க இத்திருவிடத்தை ஆளும் பேறுபெற்ற புண்ணிய மூர்த்திகளின் கண்கள் திறக்கவில்லை. அதற்கு மாறாக 'கண் துடைப்பு' வேலை செய்ய மட்டும் தவறுவதில்லை, இந்தக் கருணாமூர்த்திகள்!

ஆண்டுதோறும் 'கைத்தறி வாரம்' கொண்டாடுகிறார்கள். பல்வேறு அரசியல் தலைவர்களையும் கொண்டு கைத்தறியின் பெருமையைப் பேசச் செய்கிறார்கள். இசை—கூத்து மூலம் பிரச்சாரம் செய்கிறார்கள். ஆனால் பயன் பூஜ்யம்! நெசவாளர்களின் துயர் துடைக்கப்படவில்லை. அவர்களின் விழிகளின் கண்ணீர்க் கால்வாய்கள் அடைக்கப்படவில்லை!

நெசவாளர்களின் பிணியைப் போக்க நாங்களும் துணையாக இருக்கிறோம் என்று 'பெருமை' பேசத்தான் இத்தகைய பிரச்சாரம் பயன்படுகிறதே தவிர, கைத்தறியாளர்களின் குறையைப் போக்க அல்ல.

மக்களிடத்தில் கைத்தறி துணிகளுக்கு கிராக்கி ஏற்பட வேண்டும் என்ற எண்ணத்தில், சில ஆண்டுகளுக்கு முன் ரூபாய்க்கு ஒன்றரையணா கழிவு (ரிபேட்) அளிக்க அரசாங்கம் முன்வந்தது. அதுமட்டுமல்லாமல், ஆலைத் துணிமீது 'செஸ்' வரியும் விதித்தது. அவர்களின் துயரைப் போக்க இது நிரந்தரமான செய்கை இல்லை என்றாலும், தற்காலிக உதவியாக அமைந்தது. ஆனால் இவ்வாண்டு கைத்தறி ஆடைகளுக்கு அளிக்கப்பட்டுவந்த கழிவுத் தொகையும் குறைக்கப்பட்டது! ஆலைத் துணியின்மீது விதிக்கப்பட்டிருந்த 'செஸ்' வரியும் எடுக்கப்பட்டுவிட்டது!

ஏன்?

இங்குதான் இருக்கிறது டில்லி துரைத்தனத்தாரின் சூட்சமம். வடநாட்டு ஆலை அரசர்களின் அன்பைப் பெற அவர்களது மாளிகை வாசலிலே காத்துக் கிடக்கும் ஆளவந்தார்களுக்கு தென்னாட்டு மக்கள் மாளுவதைப் பற்றி கவலை என்ன?

ஏற்கனவே கைத்தறி துணிகள் ஏராளமாக விற்பனையாகாமல் குவிந்து கிடக்கின்றன. அதனால் ஆயிரக் கணக்கானோர் வேலையின்றித் திண்டாடும் பரிதாபகரமான நிலை—தெருவெல்லாம் பட்டினிப் பட்டாளம்—கண்ணீர் வெள்ளம்! இந்த நிலையில் திடீரென்று ஏற்கனவே வெந்து நொந்து போயிருக்கும் நெஞ்சங்களிலே வேலைச் சொருகிவிட்டது வஞ்சக வடநாட்டுப் பேரரசு! இச் செய்திக் கேட்டு, நெசவாளர்களின் வாழ்வில் அக்கறை கொண்ட அனைவரும் திடுக்கிட்டனர்.

சென்னை முதன் மந்திரி காமராஜரும், தொழில் மந்திரி வெங்கட்ராமனும் டில்லிக்குப் பறந்தனர். அதன் பயனாக இனி ஒரு ரூபாய் பொறுமானமுள்ள கைத்தறித் துணி வாங்கினால், இரண்டணா கழிவு (ரிபேட்) கிடைக்கும். ஆனால் இது நிரந்தரமானதல்ல; இரண்டே மாதங்களுக்குத்தான்! குரைக்கின்ற நாய்க்கு ஒரு துண்டை வீசுவதைப் போல—பசியால் கதறுகின்ற பிச்சைக்காரனுக்கு ஒரு கவளம் உணவை அளிப்பதைப் போல—இந்த உதவியை அளிக்க முன் வந்திருக்கிறார்கள், டில்லி துரைத்தனத்தார்!

இந்த இரண்டு மாதங்களில் கைத்தறித் துணிகளுக்கு 'கிராக்கி' ஏற்படலாம். குவிந்துள்ள சரக்கு குறையலாம். ஆனால் இரண்டு மாதங்களுக்குப் பின்?...பழைய நிலைதானே?

ஆகவே, கைத்தறி நெசவாளர்களுக்கு நிரந்தரமான பரிகாரம் தேடப்பட வேண்டும். அவர்களின் விழிகள் சிந்தும் கண்ணீர் நிரந்தரமாக துடைக்கப்பட வேண்டும். அதற்கு வழி காணாத வரையில் இத்தகைய நிலைமைகள் நீடித்துக் கொண்டேதான் இருக்கும். தற்காலிகமாக எரிமலையின் தணலை அணைக்க மண்ணை அள்ளிப் போட்டாலும், அதன் வெம்மை இருந்து கொண்டே இருப்பதைப்போல நெசவாளர்களின் அவல நிலைமையும் தொடர்ந்து கொண்டேதான் இருக்கும்.

இதற்குப் பரிகாரம்தான் என்ன?

செயற்கைச் சந்திரன்கள் வானத்தை வட்டமிடும் இந்த நாளில் கைத்தறியைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக ஆலைகளை மூடிவிட முடியாது. அதே நேரத்தில் ஆயிரக் கணக்கானோர் நம்பியிருக்கும் தறிகளையும் உடைத்தெறிந்துவிட முடியாது. ஆகவே, கைத்தறியும் ஆலையோடு சேர்ந்து வாழவேண்டும் என்கிறோம். ஆனால், இயந்திரத்துடன் மனிதன் போட்டியிட இயலுமா? ஆகவே ஆலை உற்பத்திக்கும், கைத்தறி உற்பத்திக்கும் போட்டி இல்லாமல் ஒரு நிரந்தரமான ஏற்பாடு செய்யப்படவேண்டும். ஆனால் இன்றைய அரசாங்கம் அதைச் செய்ய முன்வருமா?

ஒரு பக்கம் ஆலையை பாதுகாக்க கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் பேரரசு ... மறுபுறம் கைத்தறியை தழுவிக் கண்ணீர் வடிக்கும் நெசவாளர்கள் — இதற்கிடையில் 'அதிகாரம்' இல்லாத—வட நாட்டு ஏகாதிபத்தியவாதிகளை எதிர்க்கத் துணிவில்லாத பச்சைத் தமிழர் ஆட்சி! இந்நிலையில் அல்லலுறும் நெசவாளர்களுக்கு மீட்சி ஏது? ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பால் உட்கார்ந்து கொண்டு கோலோச்சும் கோமான்களுக்கு தென்னகத்தின் திருப்புதல்வர்களின் துயர்களைத் துடைக்க நேரம் ஏது? அக்கறை ஏது?

அவர்களின் பாதங்களை பூஜிப்பதே தாம் பிறந்ததின் பெரும் பேறு என எண்ணிக்கொண்டிருக்கும் சென்னை அரசாங்கம் கைத்தறி நெசவாளர்களின் துயரைக்கண்டும் காணாததைப் போல காலம் தள்ளுகிறது.

தென்னக மக்களின் நல்வாழ்வில் அக்கறை கொண்டவர்களின் கையிலே ஆட்சி இருக்குமானால் துன்பம் சூழ வாழும் நெசவாளர்களின் வாழ்வு இன்பச் சோலையாக மாறும்! ஏக பாரதம் பேசும் பாரத புத்திரர்கள் இந்தப் பிரச்னையையாவது கூர்ந்து கவனித்து, வடக்கிற்கும் தெற்கிற்கும் உள்ள பேதத்தை உணர்ந்து, நாட்டிற்கு நல்லதைச் செய்ய முன் வருவார்களாக!

— முல்லை சத்தி

## பன்மொழி புலவரின் அன்னையார் மறைவு.

சென்ற **6—4—58** அன்று, பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் அவர்களின் அன்னையார் முத்தம்மாள் அவர்கள் உயிர்நீத்த செய்தி கேட்டு மிக வருந்துகிறோம்.

அன்னையாரின் மறைவால் துயரில் ஆழ்ந்துள்ள பன்மொழிப் புலவர் அவர்கட்கும், அவரது தம்பியர்களுக்கும், குடும்பத்தினர்க்கும், உற்றார் உறவினர்களுக்கும், நமது அனுதாபங்களை உரித்தாக்குகிறோம்.




வெள்ளி 18-4-58 சென்னை

# உரிமை பறிபோகிறது!

பள்ளி மாணவனாக இருக்கும்போது ஜனநாயகத்தைப் பெருமைப்படுத்திக் கட்டுரை வரைந்து; ஆசிரியப் பாதிரியாரின் கண்டனத்திற்கு ஆளான நெப்போலியன், வளர்ந்ததும் ஜனநாயகத்தின் எதிரியானான்!

எதற்கெடுத்தாலும் 'மக்கள், மக்கள்' என்று ஓலமிட்டுக் கொண்டிருந்த முசோலினி பதவிக்கு வந்ததும் சர்வாதிகாரத்தின் சின்னமானான்.

இட்லர் பதவி ஏணியின் கடைசிப் படியை மிதித்ததும், அதை உதைத்துத் தள்ளி தன்னை யாரும் அசைக்க முடியாதபடி யதேச்சாதிகார நிலையை ஏற்படுத்திக் கொண்டான்.

அதே ஜனநாயக வழியில்தான் பிரயாணம் செய்து மத்திய அரசாங்கத்தை இமயமலைபோல் வலுவுள்ளதாகவும்; மாநில அரசுகளென்னும் ஆடுகளை விழுங்கி ஏப்பமிடும் வேங்கையாகவும் மாறி; தனது சர்வாதிகார இலட்சியத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக நிறைவேற்றிக் கொண்டு வருகிறது, காங்கிரஸ் கட்சி!

பாரத் வர்ஷத்தில் மத்திய அரசாங்கத்துக்கும் மாநில அரசுகளுக்கும் உள்ள உறவு எத்தகையது என்பதைப் பற்றி நாம் மட்டுமல்ல; பிரக்யாதி பெற்ற அரசியல் சட்ட வல்லுனர்களும் வெளி நாட்டு விற்பன்னர்களும் தீர்ப்பு சொல்லியிருக்கின்றனர்.

இலங்கைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் மத்திய அரசாங்கம் எப்படி அதிகாரங்களின் குவியலாகத் திகழ்கிறது—என்பதுபற்றி விளக்கியிருக்கிறார்.

கவர்னர் ஜெனரலாயிருந்த ஆச்சாரியார் சென்னை முதலமைச்சராக சிறிது நாள் அமர்ந்த பிறகுதான் தெரிந்து கொண்டார், மாநில அரசு எவ்வாறு வலுவற்று இருக்கிறது—என்கிற உண்மையை!

இங்குள்ள மாநில அமைச்சர்களில் பலர்கூட உணர்ந்திருக்கிறார்கள்—தாங்கள் வெறும் முனிசிபாலிட்டியின் அதிகாரத்தைத் தான் பெற்றிருக்கிறோம்—என்கிற ரகசியத்தை!

அதிகாரங்கள் அனைத்தும் மத்திய அரசாங்கத்தில்!

அந்த மத்திய அரசாங்கத்தை அதிகாரம் செய்வதோ வட நாட்டார்—அதிலும் பெரும்பான்மை இந்தி மொழி பேசுவோர்!

ஆக; கூட்டிக் கழித்தால் மத்திய அரசாங்கம் என்பது இந்தி மொழி பேசுவோரின் கைப்பாவையாக; அவர்கள் சுட்டு விரல் அசைத்தால் தலை வணங்கித் தொழுது நிற்கும் சேவகனாக இருந்து வருகிறது!

அதனால் படிப்படியாக அந்த இந்தி மொழி பேசுவோர் மாநில அரசுகளிடமிருந்து அதிகாரங்களைச் சுருட்டிக்கொள்வதோடு மட்டுமின்றி; படிப்படியாக இந்தி மொழியையும் திணிக்கும் இரக்கமற்ற வேலையிலே ஈடுபட்டிருக்கிறார்கள்!

இனிமேல் மாநிலங்களுக்குள்ள உயர்நீதி மன்றங்களின் நீதிபதிகளைத் தேர்ந்தெடுக்கும் விதம் இப்போது இருப்பதுபோல் இருக்கப் போவதில்லையாம்!

நீதிபதிகளுக்கென்று அனைத்திந்தியப் பட்டியல் ஒன்றினை எல்லாம் வல்ல மத்திய அரசாங்கம் தயாரிக்குமாம்!

அந்தப் பட்டியலிலிருந்துதான் மாநிலங்களின் உயர் நீதி மன்றங்களுக்கான நீதிபதிகள் தேர்ந்தெடுக்கப்படுவோர்களாம்!

அதோடு, அப்படித் தேர்ந்தெடுக்கப்படுகிற நீதிபதிகளில் மூன்றில் ஒரு பகுதியினர் பிற மாநிலத்தவர்களாகத்தான் இருக்க வேண்டுமாம்!

—இப்படி யெல்லாம் உள் நாட்டு அமைச்சர் பந்த் பாராளுமன்றத்திலே அறிவித்திருக்கிறார்.

இந்தப் புதிய முறை எதற்காக? இதுவரை கடைப்பிடிக்கப்பட்டுவந்த முறையில் காணக் கிடக்கும் குறைபாடுகள்—கஷ்டங்கள் என்னென்ன?

—இப்படி யெல்லாம் சந்தேக விளக்கம் கேட்ட உறுப்பினர் ஒருவருக்கு சரியான பதில் தர வில்லை, உள்நாட்டு அமைச்சர்!

இதனால் மாநில அரசுகளின் நியாயமான உரிமை பறிக்கப்படுகிறது என்பதைத் தவிர இன்னொரு சூழ்ச்சித் திட்டமும் அமுலாவதற்கு இடமிருக்கிறது.

மூன்றில் ஒரு பங்கு நீதிபதிகள் வெளி மாநிலத்தவராகத்தான் இருக்க வேண்டுமென்பதால் தென்னகத்தில் அதிகமான வட நாட்டாரை இறக்குமதி செய்வதற்கு இது வசதி செய்து தருகிறது.

உதாரணமாக, தமிழ் நாட்டிலே இப்போது தமிழ் ஆட்சி மொழியாகியிருக்கிறது.

நீதிபரிபாலனமும் தமிழில்தான் இருக்க வேண்டுமென்கிற நிலைமை இங்கு தோன்றுவதற்கு இன்னும் அதிக நாட்கள் பிடிக்காது!

அப்படியே தமிழ் நீதி பரிபாலன மொழியாக மாற; அப்போது தமிழ் தெரியாத பிற மாநிலத்தவர்கள் உயர்நீதி மன்றத்திலே நீதிபதிகளாக வீற்றிருந்தால் அதற்கு என்ன பெயர்?

—இதை; பிராந்திய மொழிகளுக்கு மகுடம் சூட்டுவதைத் தடுத்து நிறுத்தும் காட்டுமிராண்டிச் செயல் என்றுதான் கூற வேண்டும்!

தமிழகத்து மாந்தர் இந்த விஷமத்தனமான முயற்சியை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்பதுடன்; இதை வன்மையாகக் கண்டிப்பார்கள்—என்பதையும் 'தாம் எதைச் செய்தாலும் இவர்களுக்குச் சொரணை கிடையாது'—என்று நினைத்துக் கொண்டிருக்கும் வட நாட்டாருக்குத் தெரிவித்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்!

# 'முரசொலி'க்கு 5-வது ஆண்டு!

இந்த வாரம் முரசொலி தனது இலட்சியப்புரி பயணத்தில் நலமான நான்கு ஆண்டுகளை முடித்துக் கொண்டு நம்பிக்கையோடும்; உறுதியோடும் ஐந்தாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது!

ஐந்து—இந்த எண்ணுக்கே ஒரு தனிச் சிறப்பு உண்டு!

நமது நாட்டைப் பொறுத்த வரையில் பாரதம் புகழும் பஞ்ச பாண்டவர்கள்; தேவர்கள் அருந்தும் பஞ்சாமிர்தம் — இப்படி ஐந்து முக்யத்துவம் பெற்றிருக்கிறது.

அதனால்தானோ என்னவோ நமது பண்டிதர் தனது வெளி நாட்டுக் கொள்கைக்கும் பஞ்சசீலம் என்று பெயர் வைத்திருக்கிறார்!

ஆனால் ஐந்து ஒரு கால வரம்பைக் குறிப்பிட்டு ஒரு நாட்டின் பொருளாதார வளத்தின் உயர்வைச் சொல்லும் 'தர்மா மீட்டராக' மாறியது சோவியத் யூனியனால்தான்!

அங்குதான் முதன் முதலாக திட்டமிட்டு பொருளாதார வாழ்வை முன்னேற்ற முடியும் என்று முடிவுகட்டி; அந்தக் குறைந்த பட்ச காலவரம்பு ஐந்தாக இருக்கலாம் என்று முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை வகுத்தார்கள்.

அந்த அடிச்சுவட்டைத்தான் இப்போது இங்கும் பின் பற்றுகிறார்கள்!

எப்படியோ ஐந்தாண்டு என்பது வளர்ச்சியைக் குறிப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்படும் காலவரம்பாகி விட்டது.

மனித வாழ்க்கையில் ஐந்து ஆண்டு என்பது பால பருவத்தைத்தான் குறிக்கும்!

நாட்டுப் பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் வேண்டுமானால் ஐந்து ஆண்டு என்பது குறைந்த பட்சகால வரம்பாக இருக்கலாம்.

ஆனால் ஒரு பத்திரிகையைப் பொறுத்தவரையில் ஐந்து ஆண்டு என்பது வாலிபத்தின் சக்தியையும்; வயோதிகத்தின் முதிர்ந்த அனுபவத்தையும் சேர்த்துத் தொகுத்திடும் ஒரு புதுமையான பருவமாகும்!

ஏனெனில் இந்தக் காலத்தில் ஒரு பத்திரிகையினால் ஐந்து வாரங்களுக்குத் தாக்குப் பிடிப்பது என்பதே 'தர்ம சங்கடமாக' இருந்து வருகிறது.

இந்த நிலையில் முரசொலி நான்காண்டுகளை நலிவின்றிக் கடந்திருக்கிறது என்பது அதைப் போற்றி வளர்த்திடும் உங்களுக்குத்தான பெருமை!

இந்த நான்கு ஆண்டுகளில் 'முரசொலி'ச் சிறுவன், தன்னால் முடிந்த வரை நாட்டவரிடையிலும்; அலை சடலுக்கப்பாலும் விடுதலைக் கனலைத் தன்னால் முடிந்தவரையில் மூட்டி வளர்த்து; தென்னகத்தின் மாபெரும் அணியாம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தன்னாலியன்ற சிறு பணியைச் சிறுமை வந்து சேரா வண்ணம் செவ்வனே செய்து முடித்திருக்கிறான்!

இன்றுபோல் இனியும் பணியாற்ற அந்த இளஞ்சிட்டை நீங்களும் வாழ்த்துங்கள்; வாழ்த்துவதோடு மட்டுமின்றி உங்கள் ஆதரவையும் தாருங்கள் என்றுதான் மீண்டும் மீண்டும் கேட்டுக் கொள்கிறோம்!

ஃ

# விரயமாகிறது, வரிப் பணம்! வாய்வீரம் மட்டும் நிற்கவில்லை!

மாநில சர்க்கார் ஊழியர்கள்—

ஆசிரியர்கள்—

இவ்விரு சாராரும் நாட்டின் நரம்பு போன்றவர்கள். "விலைவாசி 'விஷம்'போல் உயர்ந்துள்ள இந்நாளில் எங்களின் வாழ்வும் வளமாக இருக்க ஊதியம் தாருங்கள்!" என்று போர்க்குரல் எழுப்பும்போதெல்லாம், இந்த மாநில சர்க்கார் 'கஜானா காலி' என்று கூறத் தவறுவதில்லை. "பணம் எங்கே இருக்கிறது?" என்ற வினாவையும் எழுப்புகிறார்கள். "தமிழகத்தில் புதிய தொழிற்சாலைகள் ஏன் ஏற்படுத்தக்கூடாது?" என்று கேட்கப்படும் போதெல்லாம் 'நிதி இல்லையே' என்ற பல்லவியைத் திருப்பித் திருப்பி பாடத் தவறுவதில்லை, 'மதியூக மந்திரி'கள்!

எதற்கெடுத்தாலும் 'பணம் இல்லை; பணம் இல்லை' என ஒப்பாரி வைக்கும் ஆட்சியாளர்களின் அவலட்சணத்தை சென்னை அரசாங்கத்தின் பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை அம்பலமாக்கியிருக்கிறது! நாட்டின் பொதுப் பணம்—மக்களிடம் 'வரி'யாக வசூலித்த தொகை—மக்களின் வாழ்வு மலர உபயோகிக்க வேண்டிய செல்வம் எவ்வாறு சிலரால் சுரண்டப்பட்டிருக்கிறது—என்பதை அவ்வறிக்கை படம் பிடித்துக் காட்டியிருக்கிறது!

அரசாங்கத்தின் அலட்சியத்தால் ஆயிரக் கணக்கான ரூபாய்கள் விரயமாக்கப் படுகின்றன. இலட்சக் கணக்கான ரூபாய்களை ஏப்பம் விட்டிருக்கிறார்கள் சில அதிகாரிகள்! அந்தக் கொள்ளையரை குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தக்கூட இந்த சர்க்காரால் முடியவில்லை!

மாநில சர்க்காரின் பொதுக் கணக்குக் குழு அறிக்கையை காண்போர் யாவரும் இந்த அரசாங்கத்தில் நடந்துள்ள 'அக்ரமத்தை'க் கண்டு அலறாமல் இருக்க முடியாது. அத்தகைய திடுக்கிடும் செய்திகளை கூறுகிறது அவ்வறிக்கை.

1955—56—ம் ஆண்டின் பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கையை இந்தக் குழுவின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான வி. கே. இராமசாமி அவர்கள் சமீபத்தில் சட்டசபையில் சமர்ப்பித்தார்.

கையாடல்—வீண் செலவு — தவறான நிர்வாகத்தால் ஏற்பட்ட விரயம் — ஆகியவைகளை இவ்வறிக்கை சுட்டிக் காட்டியிருக்கிறது!

அவ்வறிக்கை தெரிவித்துள்ள ஊழல்களில் சிலவற்றை மட்டும் தருகிறோம், இவ்வரசாங்கத்தின் அவலட்சணப் போக்கை மக்கள் புரிந்து கொள்ளட்டும் என்பதற்காக!

உணவு தானியங்கள்மீது இருந்த கட்டுப்பாடு நீங்கிய போது இங்கு தேங்கி இருந்த ஒரு லட்சம் டன் அரிசியை மத்தியப் பேரரசுக்கு திருப்பி அனுப்பப்பட்டதில், ஐந்தாயிரம் டன் அரிசி குறைந்து விட்டது. இந்த வகையில் ஏற்பட்ட நஷ்டம் ஆறு இலட்சத்து அறுபத்தோராயிரம் ரூபாய்கள் ஆகும். இந்தத் 'தொகை' கணக்கில் எழுதப்பட்டு 'சரி' செய்யப்பட்டு விட்டது.

ஐந்தாயிரம் டன் அரிசி எப்படி குறைந்தது? இந்த 'அரிசியை' கொரித்த 'எலிகள்' யார்? இதை இவ்வரசாங்கம் தீவிரமாக விசாரித்ததாகத் தெரியவில்லை. ஏழு இலட்சம் ரூபாய்கள் பாழ். இந்த வகையில்!

'சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்ட்' ஒரு மொத்த கூட்டுறவு கடைக்கு 1.05 இலட்ச ரூபாய் பொறுமானமுள்ள அரிசியைத் தவறுதலாக அனுப்பி விட்டது. ஆனால் அந்தக் கூட்டுறவுக் கடையிலிருந்து அந்தத் தொகையை அவர்களால் வசூலிக்க முடியவில்லை. அரிசியையும் திருப்பிப் பெறவில்லை. அது மாத்திரமல்ல; அரசாங்கத்திற்கு அக் கூட்டுறவு கடை கொடுக்க வேண்டிய 1.23 இலட்ச ரூபாயையும் கொடுக்கவில்லை.

இத்தகவலை தெரிவித்ததோடல்லாமல், இதற்குப் பரிகாரம் ஏன் தேடப்படவில்லை என்ற வினாவையும் எழுப்பி இருக்கிறது.

மாவட்ட ஆணையாளர் இதை அலட்சியமாக விட்டு விட்டு இருந்தாலும், 'ரெவினியூ போர்ட்' இதைக் குறித்து தக்க விசாரணை செய்திருக்க வேண்டும் என்ற அபிப்பிராயத்தையும் தெரிவித்திருக்கிறது.

அதுமாத்திரமல்லாமல், ஒரு திடுக்கிடும் செய்தியையும் தெரிவிக்கிறது. அதாவது இந்த ஊழல் சம்பந்தமான தஸ்தாவேஜிகள் அழிக்கப்பட்டனவாம். ஆகவே இதற்கு பொறுப்பானவர்களை கண்டு பிடிக்க முடியவில்லை.

குற்றத்தையும் செய்து விட்டு அதை சாமர்த்தியமாகவும் மறைத்து விட்டார்கள் குள்ள நரி மனம் படைத்தோர். அந்த சுரண்டல்காரர்களை கண்டு பிடிக்க முடியாமல் திண்டாடுகிறது இவ்வரசாங்கம்.

விரயமான தொகை எவ்வளவு?

அது யாருடைய பணம்?

இதைக் கண்டு பிடிக்க முடியாத ஆட்சியில் மக்கள் கதி என்ன?

—கொலு வீற்றிருக்கும் மந்திரிமார்கள் இதைக் கண்டு வெட்கப்பட வேண்டாமா?

மந்திரிமார்கள் சட்ட மன்றத்தை அலங்கரிக்கும் களிமண் பொம்மைகள்தானா?

பூச்சி அரித்த அரிசியை சுத்தம் செய்யும் அதிகாரி ஒருவர் 25,000 ரூபாயைக் 'கையாடல்' செய்து விட்டாராம். அதற்காக ஒரு கீழ் உத்தியோகஸ்தர் வேலையிலிருந்து நீக்கப்பட்டாராம். ஆனால் கையாடல் செய்யப்பட்ட தொகை இருபத்தைந்தாயிரம் திருப்பி வசூலிக்கப்பட வில்லை. இந்த வகையில் பொதுமக்கள் பணம் இருபத்தையாயிரம் பாழ்!

வேலையிலிருந்து நீக்கப்பட்டதோடல்லாமல கண்டிப்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால், மற்றவர்களுக்கு அது எச்சரிக்கையாக இருந்திருக்கும். கடுமையான நடவடிக்கை எடுக்காததின் 'மர்மம்' என்னவோ?

பொதுமக்களின் பணம் சீரழிகிறதே என்று கவலைப் படுவோர் யாரும் இல்லாத இவ்வாட்சியில் வேறு என்ன நாம் எதிர்பார்க்கமுடியும்?

பொதுக் கணக்குக்குழு தனிப்பட்ட கம்பெனிகளுக்கு வழங்கப்படும் 'கடன்'களை குறைத்துக்கொள்ள வேண்டும் என்று அரசாங்கத்திற்கு எச்சரிக்கை செய்திருந்தும், இந்த மாநில சர்க்கார் ஒரு கப்பல் கம்பெனிக்கு 5.33 இலட்ச ரூபாய் சிறிய துறைமுக நிதியிலிருந்து கடனாக வழங்கியது. அந்த கம்பெனி முதல் தவணையைக் கட்டியது. அதற்குப்பின் கம்பெனியே திவாலாகி விட்டது. அரசாங்கம் அக்கம்பெனியின் சொத்துக்களை பறிமுதல் செய்தும், இன்னும் 2.35 இலட்ச ரூபாய் கடன் வசூலிக்கப்பட வில்லை.

பொதுக் கணக்குக் குழு எச்சரிக்கை செய்திருந்தும் இத்தகைய கம்பெனிகளுக்கு ஏன் கடன் வழங்கப்பட்டது? ஆள வந்தார்கள் இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள்?

எதற்கெடுத்தாலும், 'பணம் இல்லை, பணம் இல்லை' என கதறும் கனம்கள் இந்த விரையத்திற்கு என்ன சமாதானம் கூறுவார்கள்?

குன்றுபோல் செல்வம் குவிக்கப்பட்டிருந்தாலும், இத்தகைய ஊழல்களால் குறையத்தானே செய்யும்!

மேலே நாம் சுட்டிக்காட்டியுள்ள ஊழல்கள்போல் இன்னும் எத்தனை ஊழல்கள் எந்த எந்த இலாக்காவில் மறைந்து கிடக்கின்றதோ? இவை எல்லாம் கண்ணுக்குத் தெரிந்தவை; வெளி உலகிற்கேத் தெரியாதவைகள் எத்தனையோ?

இவைகளை எல்லாம் நோக்கும்போது, இந்த அரசாங்கம் மக்களை சவக் குழியில் புதைக்க திட்டமிட்டுக் கொண்டிருக்கிறதோ என்று ஐயுற வேண்டியிருக்கிறது!

எத்தனை, எத்தனை ஊழல்! அத்தனையையும் நாம் அடிக்கடி எடுத்துக் நட்டி வந்திருக்கிறோம். மத்திய பேரரசில் ஏற்பட்ட ஊழல்களைக் கண்டு உலகமே சிரித்தது.

'அவளுக்கு நான் என்ன மட்டமோ?' என்பதைப் போல், இந்தக் குட்டி அரசும் தனது கைவரிசையைக் காட்டியிருக்கிறது. நாட்டின் பல பாகங்களிலிருந்து எழும் கண்டனங்களைக்கூட காதில் போட்டுக் கொள்ளாமல், தலையாட்டுப் பொம்மைகள் ஏராளமாக இருக்கிறார்கள் என்ற தைரியத்தில துரைத்தனம் நடத்துகிறார்கள் ஆளவந்தார்கள். ஆனால் ஒரு நாள்......இதே நிலைமை நீடிக்குமானால் அரசாங்கத்தின் அச்சாணி முறிந்து நொறுங்கிவிடும் என்று எச்சரிக்கை செய்ய விரும்புகிறோம்! மக்களின் நல்வாழ்விற்குப் பயன்படுத்த வேண்டியவைகளை பொருப்போடு கண்காணிக்க இனிமேலாவது இவ்வரசாங்கம் முன் வரட்டும்! ஊழல் ஒழிந்து, செழிப்பு செழிக்கட்டும்!

ஃ

## கடல் கடந்தோர் கடிதம்

அன்புடையீர்!

சுட்டுத் தள்ளுகிறார்கள்!

சிறையிலே பூட்டுகிறார்கள்!

தமிழ் காக்க போர்க்கோலம் பூண்டுவிட்ட இலங்கைத் தமிழர்கள் இந்த சித்திரவதைகளை எல்லாம்கூட சகித்துக்கொள்வார்கள். ஆனால்... உயிருக்கு நேரான தமிழை இழிவு படுத்தும் முயற்சியை—தமிழ் எழுத்துக்களின்மேல் தார் ஊற்றி உள்ளத்தில் கூர் ஈட்டி பாய்ச்சுகின்ற கொடுமையை எப்படிப் பார்த்துக் கொண்டிருக்க முடியும்?

ஆனால்...... அதனினும் கொடுமை...தாய்த் தமிழகத்திலிருந்து வந்த செய்தி கேட்டு நாங்கள் தவியாய்த் தவிக்கிறோம்!

தமிழகத்து அரசவையில் வீற்றிருக்கும் பச்சைத் தமிழர், இங்கு பிச்சைக்காரர்களினும் கேவலமாக மதிக்கப்படும் எங்களை ஒரு பொருட்டாகக் கருதவில்லையாமே!

சென்னை சட்டசபையிலே இலங்கைத் தமிழர் அறப் போராட்டம்பற்றி விவாதிக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடப்பட்டபோது 'அது பற்றி விவாதிப்பது முறைகேடான செய்கை' என்று தட்டிக் கழித்து விட்டார்களாமே! இலங்கைத் தமிழ் ஏடுகள் தாயகத்தின் தரங்கெட்ட செயலைப் பக்கம் பக்கமாக எழுதி கண்ணீர் சிந்துகின்றன!

பிழைக்க வந்த பூமியில் மரணக் குழி!

பிறந்த இடத்திலே அலட்சியப் பள்ளம்!

இரத்தத்தை வியர்வையாக்கி உழைக்கப் பிறந்த ஏ, இலங்கைத் தமிழர்களே! நீங்கள் எதிலே விழுந்து உயிர்விடப் போகிறீர்கள்; உங்கள் தமிழைக் காக்க?

இங்ஙனம்,

இலங்கை வாழ் தமிழர்கள்

பதினெட்டு பேர்

★ முத்தம்மா...முனியன்...நல்ல நெஞ்சு படைத்தவர்களின் கண்டனத்திலிருந்து தப்பாதவர்கள்! என்றாலும், சாக்கடையினும் கேவலமாக அமைக்கப்பட்டிருக்கும் இந்த சமுதாயத்திலே நெளியும் அத்தகைய புழுக்கள்...ஏராளமாக இருக்கின்றன!



# முத்தம்மா

பி.சி.கணேசன் பி.எஸ்ஸி.,பி.டி.,

முத்தம்மா எங்கள் ஊரின் கோடியிலே குடியிருக்கிருள். ஊருக்குச் சற்று ஒதுப்புறமான இடம் அது. கால் வயிறு அரை வயிறு சாப்பிட்டுவிட்டு எப்படியோ காலம் போனால் போதுமென்று நாளை எண்ணிக் கொண்டிருக்கும் மக்கள் வதியும் அந்தப் பகுதியில், முத்தம்மா சேற்றில் மலர்ந்த செந்தாமரையாய் வாழ்ந்து வருகிருள்.

இன்றைக் கெல்லாம் இருந்தால் அவளுக்குப் பதினேழு பதினெட்டு வயதுக்குமேல் இருக்காது. ஆள் கருப்புதான்; ஆனாலும் கட்டான உடல்! வறுமையில் வாடினாலும் வனப்புக் குன்றாத மேனி! கருமையும் பருவச் செழுமையும் கலந்து பிரகாசித்த முகத்தில் முல்லைச் சரப் பல்வரிசை காட்டி, அவள் சிரித்துவிட்டால் போதும்; அந்த அழகை நாள் முழுதும் சலிப்பில்லாமல் பார்த்துக் கொண்டே இருக்கலாம்.

முத்தம்மா அழகி மட்டுமல்ல; எடுப்பான தோற்றத்தோடு மிடுக்கான பேச்சும் உடையவள்!

இவ்வளவு குண விசேஷங்களுடன் விளங்கிய முத்தம்மா ஊரில் எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்ததில் ஆச்சரியமில்லை. அதிகாலையில் குடத்தை எடுத்து இடுப்பில் வைத்துக் கொண்டு, அலட்சியமாக அவள் நடை போட்டுச் செல்லும் அழகைப் பார்க்க வாலிபக் கூட்டமொன்றே குளக்கரையில் கூடிவிடும். குடத்தை விளக்கி, நீர் மொண்டு கரையில் வைத்துவிட்டு, நீந்தி விளையாடுவாள், காலத்தைப்பற்றிக் கவலைப்படாமலேயே. அவளுடைய ஆட்டத்தையும் பாட்டத்தையும் கண்களுக்கும் காதுகளுக்கும் விருந்தாக்கிக் களித்து நிற்கும் காளையர் கூட்டம்! ஈரத் துணியைப் பிழிந்து இடுப்பில் சுற்றிக்கொண்டு, துணியின் ஒரு தட்டை மேலாகப் போட்டுக்கொண்டு, குடத்தை ஒய்யாரமாக இடுப்பில் ஏந்தி, இளமையின் பூரிப்பில் தேங்கி நிற்கும் அழகைக் காட்டியும் காட்டாமலும் அவள் நடந்து செல்லும் அந்த மோகனக் காட்சியில் உள்ளத்தைப் பறிகொடுக்காதோர் எங்கள் ஊரிலே ஒருவரும் இல்லை. ஓரிரு சமயம் வாலிபர் நிற்கும் பக்கம் திரும்பி, விழியிமைகள்பட்டுப் பூச்சியின் சிறகு போல் படபடக்க, புன்னகை பாணத்தை வீசுவாள். அப்பப்பா...வாலிபர் கூழாம் அப்பொழுது அடையும் மகிழ்ச்சி.... அதற்காகத்தானே அதிகாலையில் குளக்கரையில் அவ்வளவு கூட்டம்!

முத்தம்மா திருமணமானவள்; அவளுடைய கணவன் மாவுமில் ஒன்றில் தொழிலாளியாக வேலை பார்த்தான். மாதச் சம்பளம் இருபது அல்லது இருபத்தி ஐந்துக்குமேல் இருக்காது. முத்தம்மாவும் எங்கும் வேலை பார்ப்பதாகத் தெரியவில்லை. இருபது ரூபாய் வருமானத்தில் எப்படி இரண்டு ஜீவன்கள் நிம்மதியாக வாழ முடியும் என்று நான் பலமுறை ஆச்சரியப்பட்டிருக்கிறேன். ஆனால் முத்தம்மாவைப் பொறுத்தமட்டில் வறுமைக்கும் அவளுக்கும் ஏதும் தொடர்பிருந்ததாகவே எனக்குத் தெரியவில்லை. அவளுடைய சக்திக்கு மீறிய அளவிலேயே அவள் துணிமணிகள் உடுத்துவாள். மாலையில், அழகாகத் தலைவாரி, ஒரு கட்டு மல்லிகையைத் தலையில் சூடிக்கொண்டு, குளத்துக்கு நீர் மொண்டுவரக் கிளம்பிவிடுவாள். அவள் நடந்து சென்றவுடன் மூக்கைத் துளைக்கும்படி விதவிதமான வாசனைகள் காற்றில் மிதந்து வரும்

முத்தம்மாவின் ஆடம்பரத்தைப் பார்க்கும்போதெல்லாம் அவள் ஏதோ நேர்மையற்ற—சூதான—வாழ்க்கை வாழ வேண்டும் என்று எனக்குத் தோன்றியது.

மெதுவாக, ஓரிருவரிடம் முத்தம்மாவைப்பற்றி நான் விசாரித்தேன். மளிகைக் கடைக் கணக்கிலிருந்து தையல்காரருக்குக் கூலிவரை எல்லாவற்றையுமே தது. மனைவியின் விபரீதப் போக்கைப் புரிந்துகொள்ளாமலோ—அல்லது புரிந்து கவலைப்படாமலோ—இருக்கும் அந்தப் பிரகிருதியைப் பார்க்க வேண்டுமென்று விரும்பினேன். என் விருப்பமும் சீக்கிரத்திலேயே நிறைவேறியது.

ஒரு நாள் மாலை வீட்டுக்குத் திரும்பும்பொழுது வழியில் முத்தம்மாவும் அவளுடைய கணவனும் சேர்ந்து போவதைப் பார்த்தேன். அவள் வழக்கம் போல் சீவிச் சிங்காரித்து, 'கட்டாவ்' வாயில் புடவை உடலோடு ஒட்டி அழகு செய்ய, கணவனோடு சிரித்துப் பேசிக் கொண்டே சென்ருள். அவனோ, இடுப்பிலே அழுக்கடைந்த நாலு முழ வேஷ்டி, மேலே ஒரு துண்டுடன்—சட்டைகூட இல்லாமல்—அந்தப் பெண்ணழகியோடு சேர்ந்து போவதே பெருமை என்கின்ற நிலையில் சென்று கொண்டிருந்தான். அவன்தான் அவளுடைய கணவன் என்றும், இப்படி அவர்கள் சேர்ந்து சினிமாவுக்குப் போவது வழக்கமென்றும் தெரிந்து கொண்டேன்.

முத்தம்மாவின் கணவனுடைய மனப் போக்கு விசித்திரமாக இருந்தது. அந்த விசித்திரத்தின் காரணத்தை அறியும் வரை எனக்குச் சமாதானம் ஏற்படாது போலிருந்தது. பல தினங்கள் சிந்தித்தேன். அவனை என்ன காரணம் காட்டி அழைப்பது? அவனிடம் என்ன கேட்பது? அவனிடம் அவனுடைய மனைவியைப் பற்றிப் பேச எனக்கு என்ன உரிமை இருக்கிறது? அவன் என்னையே தவறுதலாகப் புரிந்து கொண்டால்......?

ஒரு நாள் இரவு மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு முத்தம்மாவின் கணவனை அழைத்து வரச் சொன்னேன். அவனும் வந்தான். அவனைத் தனியாக என்னுடன் மாடிக்கு அழைத்துச் சென்றேன்.

"உன் பேரென்ன......?"

"முனியனுங்க...."

"முனியா, உன்னிடம் அந்தரங்கமாகச் சில விஷயங்கள் கேட்கப் போகிறேன். என்னைப் பற்றித் தவருக ஏதும் நினைக்காமல் மனத்தைத் திறந்து நீ பேச வேண்டும்!"


"எவ்வளவு நல்ல மனிதன்" என்று மனதுக்குள்ளாகவே நான் எண்ணிக்கொண்டேன். "இதோ பார் முனியா, உன் மனைவி முத்தம்மா......" என்றேன். என் நாக்கு உலர்ந்து போயிற்று. மேமல பேச முடியவில்லை.

"அதுக்கென்னுங்க.......எப்ப வேணும்னாலும் அந்தக் கழுதையை இங்கே வரச்சொல்றேனுங்க!" என்ருன் அசடு வழிய.

என் தலை சுழன்றது. முனியன் பல்லிளித்தபடியே என்னைப் பார்த்துக் கொண்டு நின்ருன். நான் மீண்டும் என் நிலையை யடைந்து சமாளித்துக் கொண்டு பேசச் சில நிமிடங்கள் ஆயிற்று.

"நீ நினைக்கின்ற காரணத்திற்காக நான் உன்னை இங்கே அழைக்கவில்லை. அப்படிப்பட்ட கீழ்த்தர நினைப்பும் எனக்கு இல்லை. உன் மனைவி முத்தம்மாவின் நடத்தைபற்றி ஊரெல்லாம் பேச்சாயிருக்கிறது...நீ அவளைக் கண்டித்துத் திருத்த வேண்டும் என்று சொல்லவே உன்னை அழைத்தேன். அவளுடைய செயலுக்கு உடன்தையாக இருக்கும் அளவுக்குக் கேவலமாக இருப்பாயென்று நான் நினைக்கவே இல்லை..."—நான் சற்று வேகமாகவே பேசினேன்.

"ப்பூ...இதுக்குத்தானு கூப்பிட்டீங்க......ரொம்ப சந்தோசம்......இதோ பாருங்க, ஒழுக்கமா இருக்கணும்னுதான் எங்களுக்கும் ஆசை......ஆனால் எம் பெணசாதி பத்தினியா இருந்தப்ப கந்தல்தான் கட்டியிருந்தா; கால் வயிற்றுக் கஞ்சிதான் குடிச்சுக் கிட்டிருந்தோம். அபபோ, எங்க ஒழுக்கத்தை மெச்சி யாரும் உதவி செய்துடலே......அவள் மெதுவாக ஒழுக்ஈமில்லாமல் கெட ஆரம்பிச்சா; எனக்கும் முதல்லே மனசு ரொம்பவெட்கப்பட்டது; அவளைப் பல சமயம் அடிச்சுக் கூடப்போட்டேன். நாளாக நாளாக,என் மனசும் மரத்துப் போச்சு...இப்போ அவ நல்ல துணிதான் கட்டுரு. மூணு






இலவசமாகவே அவள் சமாளித்து வருவதாகக் கேள்விப் பட்டேன். இப்படியும் ஒரு ஈனப் பிழைப்பா என எண்ணினேன்.

அதற்குப் பிறகு முத்தம்மாவின் கணவனைப் பார்க்க வேண்டுமென்று என்னுடைய உள்ளத்தில் ஒரு ஆவல் எழுந்

முனியனின் முகத்தில் ஆச்சரியம் வெளிப்படவில்லை; மாருகத் தலையைச் சொரிந்து கொண்டே அசட்டுச் சிரிப்பு சிரித்தான் பிறகு, "பாதகமில்லீங்க, சொல்லுங்க..." என்ருன்.

[தொடர்ச்சி பக்கம்—10]




பொன்மணி, பூஞ்சோலை இருவரும் போட்ட கூச்சலில் தூரத்திலேயுள்ள வீடுகளிலே இருந்து ஒரு சிலர் விளக்குகளுடன் ஓடிவந்தனர். அப்போதுதான் வீட்டைவிட்டு வெளியேறிய தீச்சட்டி சிங்காரம் சப்தத்தைக் கேட்டுப் பதைப்போடு திரும்பினான். என்றாலும் ஒரு மரத்தடியில் ஒளிந்து நடப்பதைக் கவனித்தான். ஏனெனில் ஒருவேளை தான் ஓடிவந்ததைத்தான் பூஞ்சோலை தெரிந்துகொண்டு கத்துகிறாளோ என்ற அச்சம் அவனுக்கு. திரும்பி வந்து மீண்டும் அவர்களிடையே சிக்கிக்கொண்டு அவஸ்தைப்பட அவன் தயாராயில்லை.

அதற்குள் பக்கத்துத் தெருவினர் வீட்டு முன்னே கூடிவிட்டனர். காளை தன்னுடைய பாய்ச்சலை நிறுத்தவில்லை. அதன் தாக்குதலுக்கு ஆளான அந்த மனிதன், தரையிலே கிடந்த ஒரு பருமனான மரத்துண்டோடு தன் உடலை மறைத்து ஒட்டிக்கொண்டு கிடந்ததால் காளையின் கொம்புகள் அவன்மீது குத்திட இயலவில்லை. மரத் துண்டின்மீது ஏற்பட்ட பெரிய காயங்கள் அவன் மேனியில் பட்டிருக்குமேயானால் அவன் உருத் தெரியாமல் சின்னா பின்னமாகியிருப்பான். தெருவினர் ஓடிவந்து எவ்வளவோ கத்தியும் காளை அவனை விட்டுத் திரும்பவில்லை. அவர்களுக்கோ அதனிடம் நெருங்குவதற்குப் பயம். தூர நின்று கல் எறிவதற்கும் அவர்கள் தயாராயில்லை. ஏனெனில் அது கோயில் காளை! ஆண்டவனுக்குக் கோபம் வரும். அதைவிட அதிகமாக அந்தக் காளைக்கே ஆத்திரம் வரக்கூடும். நினைப்பு வைத்துக்கொண்டு அடையாளம் பார்த்து தனித் தனியாக ஒவ்வொருவரையும் அது பழி வாங்கிவிடும் என்ற பயம் அவர்களைப் பிடித்துக் குலுக்கியது.

அய்யோ, அந்த ஆள் செத்துவிட வேண்டியதுதானா என எண்ணி பொன்மணி கண் கலங்க, "யாராவது ஓடிப்போய் காப்பாற்றுங்களேன்!" என்று கெஞ்சினாள். யாரும் துணியவில்லை. கடைசியாக அவளே அந்தக் காளையிடம் ஓடினாள். அதன் எதிர்ப்புக்கு ஆளான மனிதனுக்கு நேரே சென்று காளையை எதிர்த்தாள்.

"நீங்கள் எல்லாம் ஆண் பிள்ளைகள்தானா? அந்தக் காலத்தில் காளைகளை அடக்குகிறவர்களைத்தான் கல்யாணம் செய்துகொள்வோம் என்று பெண்கள் கூறிவிட, அதற்காகப் போட்டி போட்டுக்கொண்டு உயிரைத் துரும்பாக மதித்துக் காளைகளுடன் போரிட்ட வீரர்கள் இருந்தார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறோமே — உங்களையெல்லாம் பார்க்கும்போது அதெல்லாம் கட்டுக்கதை போல் தோன்றுகிறது!" என்று பொன்மணி நினைத்துக்கொண்டாளோ என்னவோ தெரியாது. ஆனால் அவள் காளைக்கு எதிரே ஓடிய அந்த வீரச் செயல், அவள் ஊர் மக்களைப் பார்த்து அப்படி நினைத்திருப்பாள் என்றே எடுத்துக்காட்டுவதாக இருந்தது. அவளைக் கண்டதும் காளை, தன் பாய்ச்சலை அவள் பக்கம் திருப்பி பயங்கரமாகப் பார்த்தது.

அதைக் கண்ட பூஞ்சோலை, "அய்யோ! பொன்மணி! பொன்மணி!" என்று அலறிக்கொண்டு மகளிடம் ஓடி வந்தாள். இந்தக் கூச்சலும் குழப்பமும் காளையின் வெறியை அதிகமாக்கிவிடவே உதவிற்று. காளை தன் முழு பலத்தையும் கொண்டு மூர்க்கமாகப் பொன்மணியின்மீது பாய எத்தனித்தது.

பூஞ்சோலை, "அய்யய்யோ!" என்று கதறிவிட்டாள்.

சிறிது கால்களைப் பின்வாங்கி முன்னால் பாய்வதற்குக் காளை ஆவேசப் பெருமூச்சு விட்டதற்கும் எங்கிருந்தோ புல்லாங்குழலின் ஒலி வருவதற்கும் சரியாக இருந்தது. அந்தக் கொடுமையும் குலை நடுக்கமும் கொண்ட சூழ்நிலையில் குளிர்ச்சியான ஒலி நுழைந்தது மேலும் பயங்கரமாக இருந்தது. ஆனால் அந்த ஒலி, கோயில் காளையைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் பெற்றது என்பதை காளையிடம் திடீரென ஏற்பட்ட மாற்றத்திலிருந்து தெரிந்து கொள்ள முடிந்தது. குழலொலி வந்த திசையைப் பார்த்தவாறு காளை நின்றது. எல்லோருமே அந்த திசையை கவனித்தனர். குழலூதியவாறு இருட்டில் ஒரு சிறுவன் வந்து கொண்டிருந்தான். விளக்கொளிக்கு அருகாமையில் அவன் வர வர சுருளிமலை தான் அவன் என்பது தெளிவாகி விட்டது. காளையிடம் வந்து நின்றான். காளை சாந்தம் பெற்றது. தன் நாக்கால் அவன் கையைத் தடவிக் கொடுத்தது.




அவனும் அதன் முதுகில் இரண்டு தட்டு தட்டி ஏறி உட்கார்ந்து கொண்டான்.

காளை அவனைச் சுமந்து கொண்டு அந்த இடத்தை விட்டு அகன்றது. எல்லோரும் வியப்போடு அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

பூஞ்சோலை, பொன்மணியைக் கட்டிப் பிடித்துக் கொண்டு "அம்மாடி! நீ பிழைச்சியா?" என்று உச்சி முகர்ந்தாள். முத்தமிட்டாள். "நான் கும்பிட்ட தெய்வமெல்லாம் நல்ல தெய்வம்" என்று தன்னுடைய தேர்ந்தெடுக்கும் திறமையைப் பாராட்டிக் கொண்டாள்.

காளையால் முட்டப்பட்டு மரத் துண்டுக் கருகில் சுருண்டு கிடந்தவனைத் தூக்கி உட்கார வைத்தார்கள் தெருமக்கள். அவன் உடலில் பெரிய காயம் எதுவுமில்லை. காளையின் கொம்புகளுக்கு அவன் இலக்காகவில்லை. ஆகியிருந்தால் வயிறு அல்லது மார்புக்கூடு கிழிக்கப்பட்டிருந்திருக்கும். உடலெங்கும் ஊமைக் காயங்கள்—அதனால் அவன் பேசும் சக்தியிழந்து மயக்கமுற்றிருக்தான்.

ஒருவன் தன் கையிலுள்ள விளக்கை அவன் முகத்திற்கு நேரே பிடித்தான். அமைதி நிறைந்த அழகான முகம் படைத்த வாலிபன்! அரும்பு மீசை...நாகரீகத் தோற்றம்... இருபத்தைந்து வயதேயிருக்கலாம் ஏறத்தாழ! விழிகள் மூடியிருந்தன! கிராப்புத் தலையும், மீசையும் இலாவிட்டால் கௌதமரைப்போலவே காட்சி தரக்கூடும்; அவ்வளவு சாந்தம் கொஞ்சிக் கொண்டிருந்தது அந்த இளமை ததும்பும் வதனத்தில்!

பொன்மணி, அவசர அவசரமாக ஓடிப்போய் தண்ணீர் கொண்டுவந்தாள். அதை வாங்கி, பூஞ்சோலை அவன் முகத்தில் தெளித்தாள். "மெதுவாக உள்ளே தூக்கிக்கொண்டு வாங்க!" என்று பூஞ்சோலை கேட்டுக்கொண்டதின் பேரில் சிலர் அந்த வாலிபனை வீட்டுக்குள்ளே தூக்கி வந்தனர். அவனை எங்கே படுக்க வைப்பது என்று பூஞ்சோலை சுற்றுமுற்றும் பார்க்கும்போதுதான் சிங்காரம் தப்பிவிட்டான் என்பது அவளுக்குத் தெரிந்தது. "அடி அம்மா! சந்தடி சாகிலே நம்ப கண்ணில எல்லாம் மண்ணைத் தூவிட்டானே!" என்று ஆச்சரியமும், ஆதங்கமும் கொண்டு சிங்காரம் படுத்திருந்த கட்டிலிலேயே அந்த வாலிபனையும் படுக்கவைக்கச் சொன்னாள்.

இதையெல்லாம் பார்த்த பொன்னையாவுக்கு பெரும் சங்கடமாகிவிட்டது. "அடடா! இது என்ன பெரிய எழவாப் போச்சு! இது வீடுதானா? இல்லை, ஆஸ்பத்திரியா? தெருவில் அடிபடுறவன், உதைபடுறவன் எல்லரும் இங்கதானா?" என்று முணுமுணுத்தார். நல்லவேளை; அதற்குமேல் அவரைப் பேசவிடாமல் சரியான சமயத்தில் இருமல் தடைபோட்டது. "எக்கேடாவது கெட்டுப் போங்க! எனக்கு என்ன வந்து கிடக்கு?" என்று இருமிக்கொண்டே தன் பேச்சுக்கு முத்தாய்ப்பு வைத்தார் அவர்.

பூஞ்சோலையும், பொன்மணியும தெருவிலேயுள்ள சிலரும் சேர்ந்து அந்த வாலிபனுக்குத் தேவையான சிகிச்சைகளைச் செய்யத் தொடங்கினர். எல்லாவற்றையும் ஒழுங்காகக் கவனித்துக்கொண்டு ஒளிந்திருந்த சிங்காரம், அதை விட்டுக் கிளம்பி தன் நடையிலே வேகம் காட்டினான். நெடுநேர சிகிச்சைக்குப் பிறகு, மயக்கமுற்றிருந்த வாலிபன், சிறிது கண் திறந்து தன்னைச் சுற்றியிருப்பவர்களையெல்லாம் வியப்போடு பார்த்துவிட்டு, புரண்டுபடுத்துக் கொண்டான். "இனி பயமில்லை --அயர்ந்து தூங்கட்டும்" என்று அனைவரும் பூஞ்சோலை வீட்டை விட்டு வெளியேறினர்.

மங்கலாக எரிந்துகொண்டிருந்த விளக்கு வெளிச்சத்தில் வாலிபனின் முகத்தைப் பார்க்கக்கூடிய தூரத்தில் பொன்மணி உட்கார்ந்திருந்தாள். வாழ்க்கையில் அதுவரையில் பெற்றிராத ஒரு புதிய உணர்ச்சிக்கு அவள் அடிமையாக நேரிட்டது. அவனையுமறியாமல் அவன் முகத்தை அவள் பார்த்துக்கொண்டேயிருந்தாள். தான் ஏதோ தவறு செய்வதாக ஒரு எண்ணம் தோன்றுவதும், தோன்றிய வேகத்தில் அந்த எண்ணம் மறைவதும் — அவளுக்கு ஒரு புதுமையாக இருந்தது. தன் உள்ளத்தை இதுவரையில் யாராலும் பறித்துக் கொள்ள முடியவில்லை. இப்போதோ அவளே வலிய வந்து தன் இருதயத்தை இந்த வாலிபனுக்குப் படைத்திடத் தயா

ராகிவிட்டாள். தெளிந்த நீரோடையில் மின்னி மிதக்கின்ற கெண்டை மீன்களைக் கொத்திச் செல்ல சாய்வாகவும் — குறி தவருமலும் பாய்ந்து செல்லும் "கிருட்டின"ப் பறவைகளைப் போல அவள் கண்கள் அவன் முகத்தை நோக்கிப் படையெடுத்தன. என்றுமில்லாத ஒரு விளக்கமுடியாத உணர்ச்சி அவளை ஆட்டிப் படைத்தது.

அவன் வலியின் காரணமாக முனகும்போதெல்லாம் அருகேயிருந்து உடம்பைத் தடவிக் கொடுக்கலாம் போலிருந்தது அவளுக்கு. அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு, தன் மெல்லிய விரல்களால் அவனது அழகான நெற்றியை வருடிக் கொண்டேயிருந்தால் அயர்ந்து தூங்குவானே என்று தனக்குத்தானே ஆசையோடு நினைத்து வெட்கப் பட்டுக் கொணடாள்.

"பொன்மணீ! போய்ப் படம்மா!... என்னமோ தெரியலே ஊரே கெட்டுக்கிடக்கு— இத பாரு...அந்த சிங்காரம் வேற தப்பி ஓடிட்டான். ஆவேசம் வந்து ஆபத்துன்னு சொல்லுச்சு! பேயை இங்கு விட்டுட்டு போயிட்டானே என்னமோ...யார் கண்டது! தெய்வங்களா!......குடும்பத்துக்கு ஒரு குறைவும் வராம காப்பாத்துங்க!" என்று உருக்கமான வேண்டுகோளோடு பூஞ்சோலை, பொன்மணியைத் தூங்கச் சொல்லிவிட்டுத் தானும் சற்று கண் அயர்ந்தாள்.

பொன்மணிக்குத் தெரியும் அளவில் பொழுதும் விடிந்தது. அலைந்து கொண்டிருந்த அவள் கண்கள், பகல் நேரத்திலே அந்த வாலிபனின் முகத்தைத் தெளிவாகப் பார்க்கப் போகிறோம் என்ற ஆசையோடு அவளைத் தட்டி எழுப்பி கூடத்துப் பக்கம் நடக்கச் செய்தன.

பூஞ்சோலையும் அதற்குள் எழுந்து, "தம்பீ! தம்பீ!" என்று அந்த வாலிபனை எழுப்பினாள்.

வாலிபன் கண் விழித்தான். "நான் எங்கிருக்கிறேன்?" என்று கேட்கவில்லை. எங்கேயோ பத்திரமான இடத்தில் இருக்கிறோம்; யாரோ பரிவு மிக்கவர்கள் தன்னைக் காப்பாற்றியிருக்கிறார்கள் என்று மட்டும் புரிந்து கொண்டான்.

"எப்படியிருக்கிறதப்பா உடம்பு?" என்று கேட்டாள் பூஞ்சோலை.

"பரவாயில்லை. ரொம்ப நன்றியம்மா!" என்றான் வாலிபன்.

பொன்மணி, தூண் மறைவில் நின்று கொண்டு அவன் இதழசைவில் தெரிகின்ற எழிலை— குரலில் இழைகின்ற சங்கீதத்தை ரசித்துக் கொண்டிருந்தாள்.

"லொக்! லொக்!!"—இருமல் சப்தம்! பொன்னையா மெதுவாக கூடத்துப் பக்கம் வந்தார்.

"இந்தப் பயல் எங்கே போனான்? உருப்படாத கழுதை! இப்படி ஊர் சுத்தினால் கடைசியிலே கையிலே திருவோடு எடுக்க வேண்டியதுதான்!" என்று பொன்னையா கூறி முடிப்பதற்கும்... "அரகர மகாதேவா! அன்னக் காவடி தர்மம் தாயே! அண்ணா மலைக்கு அரோகரா!" என்று ராகம் போட்டபடி சுருளிமலை உள்ளே நுழைவதற்கும் சரியாக இருந்தது.

"எங்கேடா போனே? என்னடா நினைச்சுக்கிட்டிருக்கே உன் மனசுலே! ஆயும் அக்காளும் கஷ்டப்பட்டு சம்பாதிச்சு போட்டா சப்தம் போடாம சாப்பிட்டுட்டு ஊர் சுத்தலாம்னு திட்டம் போட்டிருக்கியா—சோம்பேறிக் கழுதை! இங்கேதான் சத்திரம், ஆஸ்பத்திரி எல்லாம் நடக்குது — ஒண்ணும் உருப்படாது! ஒண்ணும் உருப்படாது! எழவெடுத்த வீடு! எழவெடுத்த வீடு!" என்றபடி கொல்லைப் பக்கம் போனார் பொன்னையா.

அவர் தட்டுத் தடுமாறி நடப்பதைக் கவனித்த சுருளிமலை, "மெள்ள! மெள்ள! கோபத்திலே கீழே விழுந்து விடாதிங்க அப்பா!" என்று அவர் கையைப் பிடித்துக் கொல்லைப் புறம் அழைத்துப் போனான்.

தன் தந்தையின் பேச்சால் அந்த வாலிபரின் முகத்தில் ஏதோ ஒரு மாற்றத்தைக் கண்ட பொன்மணி மிகவும் கலங்கி விட்டாள். அதிர்ச்சி அடைந்துவிட்டாள். பூஞ்சோலைக்கும் சட்டென்று ஒன்றும் சொல்ல முடியவில்லை. ஆனால் சமாளித்து, "தம்பி...எப்போதுமே எங்க வீட்டுக்காரரு இப்படித்தான்; ஒரு முசுடு பிடித்த மனுஷன்! மனசு நல்ல மனசு! வாய்தான் சும்மா இருக்காது— லோகத்திலே சில பேரு சக்கரையாட்டம் பேசுவாங்க! காரியத்திலே வேப்பங்காய்தான்— ஆனா எங்க வீட்டுக்காரருக்கு மனசுலே கல்மிஷமே இல்லே! வெளியிலதான் இப்படி ஏதாச்சும் பேசிகிட்டு கெட்ட பேரு எடுப்பாரு! நாலு பேருக்கு செய்யவோ கொள்ளவோ அவருக்கு ரொம்ப ஆசை தம்பி! நீங்க ஒண்ணும் நினைச்சுக்காதிங்க தம்பி!" என்று அவள் சமாதானப்படுத்தினாள்.

"பரவாயில்லே! பரவாயில்லே! உங்க உபகாரத்துக்கு நான் ரொம்ப கடமைப் பட்டிருக்கிறேன். மெதுவா என்னாலே வெளியே போய்விட முடியும்—எனக்கு உத்தரவு கொடுங்கள்!" என்றான் அந்த வாலிபன்.

அதற்குள், அங்கே சுருளிமலையும் வந்து விட்டான். உடனே பூஞ்சோலை, அவனுக்கு சுருளிமலையை அறிமுகபபடுத்திவைத்து, "இதுதான் என் மகன்—அதோ நிக்கிற பெண்ணுக்கு இளையவன்!" என்றாள் பூஞ்சோலையம்மாள்.

வாலிபன், திரும்பிப் பார்த்தான். விழிகளைத் திருப்பி எடுக்க மிகவும் கஷ்டப்பட்டுப் போனான்.

பூஞ்சோலை தொடர்ந்து, "இவன்தான் தம்பி உங்களைக் காப்பாத்தினான், இவன் இல்லாவிட்டால் நீங்களும் என் பெண்ணும் அந்த கோயில் காளையோட கொம்புக்குப் பலியாக வேண்டியதுதான்!" என்று கூறினாள்.

"அப்படியா?" என்று ஆச்சரியப்பட்டான் வாலிபன்.

"ஆமாம் — உங்களை காளை முட்டித் தள்ளி நீங்க மூச்சு பேச்சு இல்லாம விழுந்து கிடந்திங்க. ஊர் ஜனங்கள் ஓடியாந்தாங்களே தவிர ஒருத்தரும் கிட்ட நெருங்கலே! அபப என் மகள் பொன்மணிதான் தைரியமா ஓடியாந்து காளையை எதுத்து நின்னாள்! காளை, என் மகளையும் கொன்னுடப் பாத்துது! அப்ப வந்து சேர்ந்தான் என் பிள்ளையாண்டான் சுருளிமலை! தம்பீ—நீங்க நம்பமாட்டீங்க; புல்லாங்குழலை எடுத்து ஊதினானோ இல்லையோ; காளைமாடு அப்படியே அவனுகிட்ட மயங்கி, மண்டியிட்டு விட்டது தம்பி!"

"அப்படியே குழலோசை கேட்டு கேட்டுப் பழகியிருக்கிற மாடு! பையனுக்குப் பழக்கமான மாடுதான்—இல்லையா?" —என்றவாறு அந்த வாலிபன் சுருளியலையையும் பொன்மணியையும் மாறி மாறிப் பார்த்தான்.

சுருளிமலை, எதுவும் பேசாமல் நின்றான். பொன்மணியோ கண்களால் பேசிவிட்டு, தன்னைத் தூணில் மறைத்துக் கொண்டாள். அந்த வாலிபனுக்கு எங்கேயோ கேட்ட நிலவுப்பாட்டு ஞாபகத்திற்கு வந்தது.

"நீலவான ஆடைக்குள் உடல் மறைத்து
நிலவென்று காட்டுகிறாய் ஒளி முகத்தை!
கோல முழுதும் காட்டிவிட்டால் உலகம்
காதற் கொள்ளையிலே சாமோ?"


—பாட்டை முணுமுணுத்துக் கொண்டான்.

பூஞ்சோலை பேச்சை நிறுத்தவில்லை. "தங்கமான பிள்ளையா தெரியிறீங்களே — நீங்க யாரு தம்பி? எந்த ஊரு?" என வினவினாள்.

"நான் ஒரு ஆரம்ப ஆசிரியன்—என் பெயர் அறவாழி! எனக்கு இந்த ஊர் பள்ளிக்கூடத்துக்கு மாற்றலாகியிருக்கு—இதுவரையிலே சேலம் ஜில்லாவிலே ஒரு கிராமத்திலே இருந்தேன்!" என்றான் வாலிபன்.

"உங்களை ஏன் இங்க மாற்றிட்டாங்க?" என்று கேட்டாள் பூஞ்சோலை.

"எனக்காகத்தான் மாற்றியிருப்பார்கள்!" என்று தனக்குள்ளே பதில் சொல்லிக்கொண்டாள் பொன்மணி.




## மறைவு

வேலூர் 'திராவிடன்' பதிப்பக உரிமையாளர் கோ. கிருட்டினனின் தந்தையார் திரு. கோவிந்தராக அவர்கள் 6-4-58 இயற்கை யெய்தினார். அவரது பிரிவால் வருந்தும் குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் எங்களது அனுதாபத்தையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

## வெறுத்து ஒதுக்கியபின் ஒத்துழைப்பு தேவையாம்!

"திட்டங்களை நிறைவேற்றுவதில் ஒத்துழைக்க வாரீர்—என்று காங்கிரஸ் கட்சி எதிர்க் கட்சிகளை அழைக்கிறது.

"ஒத்துழைப்பு என்பது, அவரவர்கள் முயற்சியில் ஈடுபடும்போதே ஒத்துழைப்பு இருக்க வேண்டும்; திட்டங்கள் தீட்டப்படுகின்ற நேரத்திலேயே, ஒரு குறிப்பிட்ட பகுதிக்கும் — ஒரு குறிப்பிட்ட மக்களுக்கும் எனத் திட்டங்களைத் தீட்டி விட்டு, எங்களை 'ஒத்துழைக்க வாரீர்' என்றால் அதில் பயன் இல்லை. திட்டங்களைப் போடும்போது எந்த அரசியல் கட்சிகளையும் அழைக்கவில்லை அது. அப்படி எந்த அரசியல் கட்சியையும் அழைத்துக் கேட்டுத் திட்டங்கள் போடாமல் — காங்கிரஸ் அமைச்சர்கள்கூட ஒன்றுகச் சேர்ந்து திட்டங்களைப் போடாமல் — அவர்களுக்கு எல்லாம் மேலாக ஒரு குழுவை நியமித்து, அக்குழுவில், நீண்டகாலமாக வெள்ளைக்கார ஏகாதிபத்திய நிர்வாகத்துடனேயே பழகிய பெரிய மனிதர்களை உட்கார வைத்துத் திட்டங்களைப் போட்டு—திட்டத்தில் இந்த இடத்தில் பாலம் கட்ட வேண்டும்—இந்த இடத்தில் எஞ்சின் கட்ட வேண்டும்—இந்த இடத்தில் பேட்டி கட்ட வேண்டும் — இந்த இடத்தில் அணை கட்ட வேண்டும் — என்று இவைகளை வகுத்துக் கொண்டு— செலவழிக்கும்போது, எங்களைப் பார்த்து திட்டங்களுக்கு ஒத்துழையுங்கள் — என்று கேட்கிறார்கள்.

"திட்டங்கள் நிறைவேறுவதற்கு அரசியல் கட்சிகள் ஒத்துழைக்க வேண்டும் என்றால், திட்டங்களைத் தீட்டுகின்றபோதும் அந்த எண்ணம் இருந்தால்தான் திட்டம் வெற்றி பெற முடியும்."

—அறிஞர் அண்ணா

கற்பனை உரையாடல்

# புத்தாண்டு நாடகம்!

"நேரு பக்த் காமராஜ் முராரே!"

[திரை தூக்கப்படுகிறது]

குருஜீ: பஞ்சசீலப் பக்தர்களே! காந்தீய ஒளிகளே! நேருதாசர்களே! அகிம்சாவாதிகளே!...புத்தாண்டு தினமாகிய இந்தப் புனித நன்னுளிலே ஜம்மு காஷ்மீர் முதல் தென்னிலங்கை வரை பரவியுள்ள பாரத நாட்டின் புகழைப் பாடிப் பரவசமடைய இங்கே கூடியுள்ளோம்!

"பாருக்குள்ளே நல்ல நாடு—எங்கள்
பாரத நாடு!...
பதவியிலே...மந்திரி பதவியிலே!...
கவர்னர் பதவியிலே!..."

சிஷ்யன்: குருஜீ!...எனக்கும் ஏதாவது பதவி கிட்டுமா? விளம்பி வருஷ சோதிடம் என்ன விளம்பியதோ?

குரு: ஆசையை அறவே துறந்த அன்பனே!...உனக்கு பதவிதானே வேண்டும்? பாடினுல் பதவி தானே வருகிறது!

சிஷ்யன்: பாடுவதா?...எதைப் பாடுவது பிரபோ?...

குரு: பாரதத்தைப் பாடிடு! அகில பாரதத்தைப் புகழ்ந்து பாடினுல் பதவி அலறி அடித்துக் கொண்டு ஓடி வருமடா சிஷ்யா! என்னோடு சேர்ந்து பாடு! பாடிடு...! ஊம்...பாடு!...

"ஜய ஜய பாரத ஜய ஜய பாரத!
ஜய ஜய பாரத ஜய ஜய ஜய ஜய!...
வந்தேமாத்ரோம்!...ஜய வந்தேமாத்
ரோம்!..."

சிஷ்யன்: என்ன குருஜீ!...வந்து ஏமாத்து கிரூமெனப் பாடுறீங்க?...

குரு: ஆமாப்பா!...உண்மை தெரியாத சிஷ்யா! உலகிலேயே பெரியதொரு கால்வாய்—வடக்கின் இராஜபுதனப் பாலைவனத்தைச் சோலை வனமாக்கும் பொருட்டு, அமைக்கப் போகிறுர்களாம்! வடக்கின் இரும்பு உருக்கு தொழிற்சாலைக்கு மட்டும் 31 கோடி ருபாய் ஒதுக்கியுள்ளார்களாம்! தெற்கு தரும் அணுசக்தி மூலப் பொருள்களைக் கொண்டு, அணுசக்தி மின்சார நிலையங்களை யெல்லாம் அங்கேதானடா அமைக்கிறுர்கள்!.........ஆனுல் சிஷ்யா; நினைத்தாலே நெஞ்சு பொறுக்கவில்லை! வடக்கினை நோக்கி இதைப்பற்றி கேட்டால் 'துரோகி' என முருடமீட்டு அழைக்க ஆரம்பித்தார்கள்! எனவே சிஷ்ய கோடிகளே! நாம் அவர்களை நோக்கிக் கீழ்க்கண்டவாறு பாடுவோமாக!...

"வடக்குக்கு பணம் பாரமா?...
வறுமை எமக்கு பாரமா?...
ஏழ்மை எமக்கு பாரமா?...
கண்ணீர்விடும் தென்னவர் உமக்கு
பாரமா?..."

சிஷ்யன்: ...குருஜீ! ஒரு சந்தேகம்!...... நாம் மட்டும் இப்படியெல்லாம் பாடி என்ன செய்வது? இங்கே பதவியிலே இருக்கிறுர்கள் தாசானு தாசர்கள்!... அவர்களும் இப்படிப் பாடினுலன்றே நல்லது! இந்நாட்டு மந்திரிகளை நோக்கி நாம் இப்படிப் பாடலாமா பிரபோ?...

"ஏ...மந்திரிகளே!...
பதவிக்கு நீர் பாரமா?
விண் புகழுக்கு நீர் பாரமா?...
பசியால் வாடும் நாங்கள்தான் உமக்கு
பாரமா?..."

குரு: ஆனுல் சிஷ்யா!... பாவம்...அவர்களால் என்ன செய்ய இயலும்?......... எதிர்த்துக் கேட்டால் அவர்கள் பதவிபோய் விடுமே! சிஷ்யகோடிகளே! இந்நாட்டு மந்திரிகள் வாழ்வதே பதவிக்குத்தானே!... 'பதவியின்றி வாழ்வதும் ஒரு வாழ்வாகுமா?' என்று கேட்பவர்களல்லவா அவர்கள்?...மந்திரிகளைப் பற்றி விளக்கமாகப் பாடுகிறேன்!...... கேட்கிறீர்களா...

"அவர்கள் ஆடுவதும் பாடுவதும்
பதவிக்கு!
ஆளைக் குல்லாய் போடுவதும் பதவிக்கு!
—மந்திரி
கூடுவதும் குழைவதும் பதவிக்கு!
எல்லாம் பதவிக்கு!...பதவிக்கு!...
பதவிக்கு!..."

... பஞ்சசீலப் பக்தர்களே! ... ஒரு நாள் பார்புகழும் மந்திரியார் ஒருவர் இல்லத்திற்குச் சென்றிருந்தேன்! மந்திரி வீட்டிலிருந்து தென்றல் காற்று வீசியது!...அந்தத் தென்றலிலே மிதந்து வந்த தீஞ்சுவைக் கீதத்தைக் கேட்டு இன்புறுவீர்களாக!...

"பதவி யளித்த போகம்!
பாரத் தந்த யோகம்!
இதுவே எனக்கு போதும்!...
ஹைஹ்ஹா ... ஹைஹ்ஹா ... ஹஹ் ஹா ...
ஹைஹ்ஹா!..."

சிஷ்யன்: ஆம் குருஜி!...இதைத்தவிர அவர்களுக்கு வேறு என்னதான் வேண்டும்?...... ஆனுல் குருஜி!...... இந்தப் புத்தாண்டிலேயாவது......நமது சுப்ரமணியனுருக்கு டெல்லி பதவி கிட்டாதா?...நமது டி. டி. கே.க்குப் பதவி ஏதும் கிடைக்காதா? அப்படியே ...அடியேனுக்கும்......

குரு: சிஷ்யர்களே!...இந்தப் புத்தாண்டு புனித தினத்தில் உங்களுக்கெல்லாம் நான் கூறும் புத்திமதி என்னவென்றுல் ... நீங்கள் யாவரும் பதவிப் பித்து கொண்டு அலைந்து திரியாதீர்கள்!

சிஷ்யன்: தாங்கள் சொல்வதிலேயும் உண்மை இருக்கிறது பிரபோ!...நேற்று புல்கானின் இருந்த இடத்திலே இன்று குருஷேவ் இருப்பதைக் காணும் பொழுது நிலையில்லாப் பதவிக்காக ஏன் இப்படி அடித்துக் கொள்கிறுர்களென்று என் சிறு மூளைக்கு எட்டவில்லை குருவே!

குரு: சிறு மூளைக்கு எட்டவில்லை; முகுளத்திற்கு எட்டிவிட்டதோ? மடையா! ருஷ்யாவுக்கு ஏனடா போகிறுய்!...... அண்மையிலே உள்ள பாகிஸ்தானிலே நாளைக்கு ஒரு மந்திரிசபை மாறுவதை நாம் காணவில்லையா? மைசூரிலேகூட முதன் மந்திரிக்கு எதிராகக் கையெழுத்து வாங்குகிறுர்களாம்!...ஆனுல்... அதைப்போல சென்னையிலே வாங்க முடியுமா?...

சிஷ்யன்: ஏன் முடியாது...பிரபோ?

குரு: என்னப்பா சிஷ்யா, அதற்குள்ளாக நமதருமைப் பெரியாரை மறந்துவிட்டாயே!...அவர் இந்த நாட்டிலே இருக்கும்பொழுது, காமராஜ் மந்திரிசபைக்கு எதிராக ஒருவன் சுண்டுவிரலை அசைக்க முடியுமா என்ன?...

சிஷ்யன்: உலக விவகாரமெல்லாம் பிறகு பேசிக் கொள்ளலாம் பிரபோ!...அடியேனுக்கும் ஒரு முதன் மந்திரி பதவி கிடைக்குமா...குருஜீ?...

குரு: சிஷ்யா!...போய் உன் வாயைக் கழுவிவிட்டு வருவாயாக!...இந்தப் 'பதவிப் பித்து' இருக்கிறதே...அது பொல்லாதது! கள்ளைவிடக் கொடியது! சிஷ்யா!...உனக்கு ஏனடா அந்தத் தொல்லை யெல்லாம்!...அடேடே...அட ...இது என்னடா...ஒரே சத்தம்!...என்னுடைய காலச் சோகத்திற் கெதிராக சோக ஒலியெழுப்புவது யாதோ?...

சிஷ்யன்: ஆகாசவாணிதான் பிரபோ!...

குரு: அது என்ன வாணி?...கலைவாணியின் அசரீரியா? கலியுகத்திலே கூடவா ஆகாசவாணி எழுந்துள்ளது?

சிஷ்யன்: அது ஆண்டவனின் அசரீரி அல்ல பிரபோ! அகில பாரதத்தின் ஆகாசவாணி—'ஆல் இந்திய ரேடியோ' எனப்படும் 'வானெலி' தான் குருவே!

குரு: தமிழ் தெரியாத நம்மைப்போல அவர்களும் ஏன் தமிழைக் கொலை செய்கிறுர்கள் சிஷ்யா? 'வானெலி' என்ற இன் சொல்லிருக்க ஆகாசவாணி என்ற அபத்தமேனடா சிஷ்யா?

சிஷ்யன்: இதைச் சொல்கிறீர்களே! தீ விபத்து நேர்ந்தால் திடீரென ஓடிப் போய் எடுத்து வந்து கொட்டுவதற்

[தொடர்ச்சி பக்கம்—10]



## வாழ்க மணமக்கள்!

சென்ற 30—3—58 ஞாயிறு அன்று, மன்னை தோழர் ப. நாராயணசாமி அவர்களின் செல்வி தென்றலுக்கும், சோங்குளம் சாமிநாதன் அவர்களின் செல்வன் துரைமாணிக்கத்திற்கும் மன்னையில் சிறப்புற திருமணம் நடைபெற்றது.

விழாவிற்கு அறிஞர் அண்ணு அவர்கள் தலைமை தாங்கினுர்கள். அப்போது தோழர் மு. கருணநிதி, தஞ்சை மாவட்டச் செயலாளர் என். எஸ். இளங்கோ, நடிகமணி டி. வி. நாராயணசாமி, தோழர்கள் அன்பில் தர்மலிங்கம், இராம அரங்கண்ணல், மற்றும் பலர் வாழ்த்துரை வழங்கினுர்கள்.



## பதினைந்து நாட்கள்!...

ஆமாம்.........பயங்கரமான பதினைந்து நாட்கள்!

அந்தக் கொடுமை நிறைந்த பதினைந்து நாட்கள் — இரண்டு வாரத்தை எப்படிக் கடத்த முடியும்? உலகமே இருண்டு கிடக்குமே! உவகை மறந்தோடி ஒளிந்து கொள்ளுமே! உள்ளமும் உலைக்களமாக மாறி வேடிக்கை காட்டுமே!

எவ்வளவு சுலபமாகத்தான் சொல்லிவிட்டார்கள், பதினைந்து நாட்கள் என்று! ஆனால் அந்தச் சொற்கள் செவிகளில் பாய்ந்த கணம் முதல் சோர்ந்துவிட்டதே நெஞ்சு!

"எப்படியாவது பொறுத்துக் கொள்ளுங்கள், பதினைந்து நாட்கள்!...நீங்கள் எதிர்பாராத மகிழ்ச்சி உங்களை 'வருக, வருக' என்று வரவேற்கும், பதினாறுவது தினத்தன்று!...என்ன; சரிதானே! ...தைரியமாக இருங்கள்......இந்த நேரத்தில் சோர்ந்துவிடக் கூடாது; தெரியுமா?..."

—இந்த ஆறுதல் சொற்களைக் கேட்டு தங்கம் வேண்டுமானால் சற்று அமைதி அடையலாம்! ஆனால் உள்ளத்திலே அணை உடைத்துப் பாய்ந்து வருகின்ற ஆசைப் பெரு வெள்ளம்.........? அதைத் தடுத்து நிறுத்த முடியுமா, அந்தச் சொற்களால்!...

முடியாதுதான்!

அதோ, இனம் தெரியாத குழப்பத்தில் சிக்கித் தவித்துத் தத்தளித்துக் கொண்டிருக்கும் தங்கத்தின் தோற்றம் அதைத்தான் சொல்லுகிறது!

"ஐயோ...பதினைந்து நாளா ? ... நான் எப்படித்தான் பொருப்பேன் ? ... என் கண்மணியைக் காணம எப்படி இருப்பேன் ? ... ஐயையோ..."

கண்கள் இரண்டும் கட்டப்பட்டு — படுக்கையிலே கிடந்த தங்கம் இப்படி அலறினாள்!

"தங்கம்... தங்கம் ... அழுவாதே தங்கம்! ... இது ஆஸ்பத்திரி தங்கம்! ... டாக்டரய்யா என்ன சொல்லிட்டுப் போயிருக்காருன்னு மறந்துடாதே! ... தைரியமாக இருக்கணும்...தெரிஞ்சுதா...? பதினாறுவது நாள் கண் கட்டை அவிழ்த்துடுவாங்களாம்.........அன்னைக்கு உன் கண் கிடைச்சடும் தங்கம்...பாழாய்ப் போன உன் கண் கிடைச்சுடும் தங்கம்!...

படுக்கையின் பக்கத்திலே நின்று கொண்டிருந்த தங்கத்தின் கணவன் இப்படிச் சொன்னான்!

"குழந்தை..."—தங்கம் மெதுவாக இழுத்தாள்.

"குடிசையிலேயிருக்கு தங்கம்... பத்திரமா இருக்கு; நீ கவலைப்படாதே, தங்கம்!..."

"உஸ்......'பேஷண்டு'க்கிட்டே சப்தம் போடாதேப்பா!......."—அவ்வழியே வந்த 'நர்ஸ்' அவனை அதட்டிவிட்டு அப்பால் சென்றாள்.




தங்கத்தின் கணவன் மௌனமானான். அவன் அங்கே இருக்கிறானா; போய்விட்டானா என்பதைத் தங்கத்தால் கண்டு கொள்ள முடியவில்லை.

தங்கத்தின் கண்கள் இருண்டு கிடந்தன. உலகமே அவள் முன் சூன்ய வெளியாகத் தோன்றியது —அவர்களது வாழ்க்கையைப் போலவே! ஆமாம்; அவர்களது வாழ்க்கையிலே மகிழ்ச்சி கிடையாது; வயிறு நிரம்ப உணவு கிடையாது; சிரித்துக் களிக்க திருவிழா என்று ஏதும் கிடையாது. போகட்டும்; தங்கத்தினுடைய கண்களுமா பறிபோக வேண்டும்?

அன்று வானம் குமுறிக்கொண்டிருந்தது. ரயில் நிலையத்திற்கு மூட்டை சுமக்கச் சென்றிருந்த அவளது கணவனை இன்னும் காணோம். பாவம், அவன் கையில் அதுவரை ஓரணாகூட சேர்ந்திருக்காது. அப்படிக் கிடைத்திருந்தால் தன் அன்புக் குழந்தைக்கு அரையணாவுக்கு 'தவிட்டுப் பிஸ்கட்'டாவது வாங்கிக்கொண்டு ஓடி வந்திருப்பானே!

தொட்டிலில் கிடந்த குழந்தை இடி சப்தம் கேட்டு வீறிட்டு அழுதது! தங்கத்திற்கு எங்கே மழை வந்து விடுமோ என்ற பயம் உண்டாகிவிட்டது. மழை கொஞ்சம் பெய்தாலும்போதும்; குடிசை நீரிலே மிதந்து விடுமே —குழந்தையை எங்கே எடுத்துப் போவது என்ற பயம் அவளுக்கு. வெளியே எட்டி வானத்தைநோக்கினாள், கருமேகக் கூட்டம் எப்படி இருக்கிறது என்று பார்க்க.

ஆனால்... அதே சமயம்.....'பளீர்' என்று விண்ணிலே தோன்றியது ஒரு மின்னல்!

மறுகணம் தங்கம் 'ஐயோ' என்று அலறினாள்; கண்கள் இரண்டையும் மூடிக் கொண்டு தெருவிலே விழுந்து புலம்பினாள்! வானில் தோன்றி மறைந்த மின்னொளி அவளது பார்வையைப் பறித்துக் கொண்டது!

●

"ஐயோ! என் கண்மணியைப் பாக்க முடியலியே! நான் என்ன செய்வேன்?... என் கண்களைப் பிடுங்கின பகவானே, என் உயிரையும் பறிச்சுக்கிலியே!..."

—தங்கத்தின் இந்தக் கதறலை எத்தனை நாட்களுக்குத்தான் பொறுத்துக்கொள்ள முடியும், அவளது கணவனால்?




குழந்தை இருக்குமிடம் தெரியாது தங்கம் தன் கைகளால் அங்குமிங்கும் தேடும்போது, அந்தக் குழந்தை "ம்மா...ம்மா!" என்று குமுறிக் குமுறிக் கதறுமே!

அவனது குடும்பத்திலே சிரிப்பு இல்லாவிட்டாலும் சிறிது நேர நிம்மதியாவது இதுவரை இருந்து வந்தது! அதையும் விழுங்கி, அதைச் சுடுகாடாக மாற்றிவிட்ட மின்னலை 'சபி'த்தான் அவன். தோன்றியவுடனேயே மறைந்து விடும் கண நேர ஆயுள் படைத்த அந்த மின்னலைத் திட்டி என்ன பலன்? எரிமலையாய் மாறிவிட்ட அவனது நெஞ்சு என்னவோ அமைதி அடையவில்லை! கண்களைப் பறிகொடுத்துக் கதறும் தன் மனைவியை ஆயிரம் முறை பார்த்துப் பார்த்து கண்ணீர் விட்டிருக்கிறான்! இந்தக் கொடுமையைக் காணாது தன் கண்களும் இரண்டுவிடக் கூடாதா என்றும் நினைத்திருக்கிறான்!

பெற்ற செல்வத்தை வாரி எடுக்க வகையற்றுத் தவிக்கும் தாய்—'அம்மா...அம்மா!...' என்று கதறித் துடிக்கும் குழந்தை—இந்த நெஞ்சலுக்கும் காட்சியைச் சகிக்க முடியாது தனி இடத்திற்கு ஓடி குழந்தைகளைப்போல குமுறிக் குமுறி அழுத நாட்கள் எத்தனையோ!...

ஆகவே, அவன் ஓடினான், ஒவ்வொரு மருத்துவர் வீடாக! மனைவிக்குப் பார்வை வேண்டும் என்று மன்றாடினான்! அத்தனை பேரும் கணக்குப் போட்டு பணம் இவ்வளவு தேவை என்று சொன்னார்களே தவிர, அவனது ஏழ்மையை —இயலாமையை நினைத்து அவன் மேல் இரக்கம் காட்டவில்லை!

பணத்திற்கு அவன் எங்கே போவான்?

"பிணமாகும் நேரம் நெருங்கி விட்டது எனக்கு" என்பதை உணர்த்துவதுபோல் பசியால் தவித்து, எலும்புக் கூடாகி விட்ட அவன் குழந்தைக்கு அரை வயிற்றுக் கஞ்சிக்கோ, அரையணா ரொட்டிக்கோகூட வழியில்லையே! நடைப் பிணமாக மாறி விட்ட தங்கத்தின் கண் திறக்க பணம் வேண்டுமாமே!

"ஏண்டாப்பா! தங்கத்தின் வீட்டுக்காரிக்கு கண் போச்சாமே!... அவ குழந்தை...?"

"அந்தக் கண்ருவியை ஏண்ணே கேக்கிற? அவளுக்கு கண் போச்சு! குழந்தைக்கு உயிர் போய்க்கிட்டிருக்கு!.........அவன் மட்டும் தடிமாடாட்டமா திரிஞ்சுக்கிட்டிருக்கான்...!"

இப்படி பக்கத்திலே குடியிருக்கும் பஞ்சைகள்கூட அவனை இழிவு படுத்திப் பேசினார்கள்.

"மனைவியின் கண்ணைத் தர முடியாத கபோதி! குழந்தையைக் கொல்லுகிறானே பாவி!"—இப்படி ஆயிரமாயிரம் குரல்கள் எங்கிருந்தோ எழும்பி ஒரு சேர ஒலித்து அவனைத் தாக்குவதாக உணர்ந்தான்!

குழி விழுந்த கண்களை நிமிர்த்தி குழந்தையை நோக்கினான். குடிசையிலே பிறந்துவிட்ட கொடுமைக்காக மண்ணைத் தின்று பசியைத் தணிக்க முயற்சித்துக் கொண்டிருந்தான் அப் பாலகன்!

கண்ணை இழந்த தங்கம் கிழிந்த பாய் ஒன்றில் முடங்கிக் கிடந்தாள், கண்ணைப் பறித்த கடவுள் உயிரையும் பறிக்க மாட்டானா என்ற நப்பாசையுடன்!

வரண்டு கிடந்த அவனது கண்களில் எங்கிருந்தோ நீர் துளிர்த்தது! சிறிது நேரம் அப்படியே நின்றான். மறுகணம் வெறி பிடித்தவன்போல் கத்தினான்.

"தங்கம்!....தங்கம்......எழுந்திரு தங்கம்!......உன் கண் திறக்க வழி செய்து விட்டேன் தங்கம்!......உம்

தொடர்ச்சி பக்கம்—10]

## குழந்தையான பெருந் தலைவர்!

குழந்தைகளை 'தனி சலுகை பெற்ற வர்க்கம்' என்று சொல்லுவார்கள். பெரிய பெரிய நாட்டுத் தலைவர்களானால் என்ன; அரசியல் அறிஞர்களானல்தான் என்ன; குழந்தைகளோடு பழகுவதில் தனி இன்பம் காண்பார்கள். அவர்களும் குழந்தைகளாக மாறிவிடுவார்கள்.

அப்படிப்பட்ட மாபெரும் அரசியல் தலைவர் ஒருவர், 'குழந்தை'யாக மாறிய கதை இது:

லெனினை உங்களுக்குத் தெரியுமே! கொடுங்கோல் மன்னர் ஆட்சியிலிருந்து ரஷ்ய பூமிக்கு விடுதலை வாங்கித் தந்த மேதை — ரஷ்யாவின் தந்தை!

அவர் இறப்பதற்கு சில நாட்களுக்கு முன்பு குழந்தைகளோடு விளையாட வேண்டுமென்று ஆசைப்பட்டாராம்.

அன்று, 1919-ம் ஆண்டு, ஜனவரி முதல் தேதி!

வெளியே கடுமையான பனிப்புயல் வீசிக் கொண்டிருந்தது மனிதர்கள் வெளியில் நடமாடவே விடாதபடி பயங்கர புயல்காற்று! அந்த இக்கட்டான நேரத்திலேயும் உடல் எங்கும் படர்ந்து கிடந்த பனித் துண்டுகளைத் துடைத்துக்கொண்டு, மாஸ்கோவுக்கு அருகிலே உள்ள சகோல்னிகி கிராமத்திலிருந்த கார்க்கியின் வீட்டில் நுழைந்தார், வியாதியால் பீடிக்கப்பட்டிருந்த லெனின்!



அங்கே நிறைய விவசாயக் குழந்தைகள் காத்துக்கொண்டிருந்தார்கள், அவருக்காக! அன்று அவர் குழந்தைகளைச் சந்திப்பதாக ஏற்பாடு! குழந்தைகளைக் கண்டதும் லெனினின் வியாதி எங்கேயோ ஓடி மறைந்தது. தானும் குழந்தையானார்; விளையாட ஆரம்பித்துவிட்டார்!

தன்னுடைய கண்களைத் துணியால் கட்டிக் கொண்டார். "கண்ணு மூச்சி" விளையாடினார். ஓடி ஓடிப் பிடித்தார். குழல் ஊதினார். தம்பட்டம் அடித்தார். களைத்துப் போகுமளவுக்கு நீண்ட நேரம் விளையாடினார்.

குழந்தைகளுக்குக் கொள்ளை மகிழ்ச்சி! லெனினுக்கு ஒரே குதூகலம்!

அதுதான் அவர் குழந்தைகளோடு குலவிய கடைசிச் சம்பவம்; அடுத்த ஆண்டு புத்தாண்டு தினம் வருவதற்குள் அவர் இறந்துவிட்டார்!

## நூல்வெளி

### அண்ணு சொன்ன கதை

ஆசிரியர்:

எ. வி. பி. ஆசைத்தம்பி

நண்பர் ஆசைத்தம்பி அவர்களை தமிழகம் நன்கறியும். பகுத்தறிவு இயக்கத்தின் கேடயமாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னணி வீரர்களுள் ஒருவர் 'அண்ணு சொன்ன கதை' அவரது அரிய படைப்பு; படிக்க, படிக்க திகட்டாத அற்புத கற்பனை. நாட்டிலே நடைபெறுகின்ற பல்வேறு நிகழ்ச்சிகளை பின்னணியாக அமைத்து இக்கதையை புனைந்திருக்கிருர்.

ஆங்காங்கு பகுத்தறிவுக் கொள்கைகளை தவழ விட்டிருப்பது அவரின் திறமைக்கு எடுத்துக் காட்டாகும். அனைவரும் படிக்க வேண்டிய எழிலோவியம்.

விலை ரூ. 1—50

கிடைக்குமிடம்:

முத்து புத்தக நிலையம்
கோட்டை ஸ்டேஷன் ரோடு,
திருச்சி—2.

●●●

### புதுமுறை ஆட்டோகிராப்

திராவிட முன்னேற்றக் கழக தலைவர்கள் — பேச்சாளர்கள்— மாவட்ட செயலாளர்கள் — நடிகர்கள்—ஆகிய 59 பேர்களின் புகைப் படங்கள் அடங்கிய இப் புதுமுறை கையெழுத்து சேகரிக்கும் புத்தகத்தை நல்ல முறையில் வெளியிட்டு இருக்கிருர்கள். கையெழுத்து சேகரிக்கும் நண்பர்களுக்கு, இந்த புத்தகம் புகைப் படங்களையும் சேகரித்துக் கொடுத்து உதவி புரிவதாக இருக்கிறது நல்ல முயற்சி.

விலை ரூ. 1—00

கிடைக்குமிடம்:

ரேயின்போ கன்சர்ன்ஸ்
சென்னை—4.

## பிறைவானம்...

புறப்படு......புறப்படு!......என்று" என்று கத்தினுன்.

தங்கம் ஏதும் புரியாது விழித்தாள். ஆனுல் அவளை இழுத்துக் கொண்டு புறப்பட்டு விட்டான் அவள் கணவன்.

●

பதினைந்து நாட்கள்!

அந்தப் பதினைந்து நாட்கள் கழிந்துபார்வை கிடைத்து விடும் தங்கத்துக்கு! தன் அன்புக் குழந்தையைக் கண் குளிரக் கண்டு களிக்கலாம்!......அதை நினைத்துப் பார்த்தபோது தங்கத்தின் உடல் பூரிப்பால் விம்மியது...அதற்கிடையில் எத்தனை இடர்கள் வந்தால் தான் என்ன!

நாட்கள் நகர்ந்தன...

தினம் தங்கத்தின் கணவன் மருத்துவ மனைக்கு வருவான். ஆப்பிளும். பாலும் சத்துள்ள உணவும் கொண்டு வருவான்!

"குழந்தை—என் கண்ணு சுகமா இடக்கானு?...'—தங்கம் பலமுறை திருப்பித் திருப்பிக் கேட்பாள்!

பதினைந்து தினங்கள் சென்று தனது பத்தரைமாற்றுத்தங்கத்தை அள்ளி அணைத்து உச்சி முகரப் போகிருளே! அந்தக் குழந்தை ஒன்றுக்காகத்தானே அவள் இத்தனை காலம் உயிரோடிருந்தாள்! இளவயதில் கண் இழந்த அவளுக்கு ஒரு ஆறு, குளம் கூடவா கிடைக்காமல் போய் விட்டது?

நாட்கள் ஒன்று... இரண்டு...... என நகர்ந்தன!

இருண்டு கிடந்த கண்கள் என்ருலும் அவளது மனக்கண், எதிரே இருந்த கற்பனைச் சுவற்றிலே ஒன்று, இரண்டு, மூன்று என்று கோடு கள் போட்டுக் கொண்டு வந்தது!

ஏ, நாட்களே! ஏன் இப்படி அன்ன நடை. போடுகிருய்? ஏன் ஆமை வேகத்தில் நகருகிருய்? ஓடேன்! சீக்கிரம் ஓடித் தொலையேன்! தங்கம் தன் கண்மணியைக் காண வேண்டாமா? ... உம் ... சீக்கிரம் ஓடு!

●

எப்படித்தான் கடந்ததோ. பதினைந்து ஆண்டுகள்போல!......

பதினுருவது தினம் ...... அன்று பொழுது விடிந்தது!

டாக்டர் வந்தார். தங்கம் தானுகவே படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்து கொண்டாள். டாக்டர், 'நர்சு'கள் புடை சூழ கண் கட்டை அவிழ்க்கத் தலைப்பட்டார்!

கட்டு அவிழ்க்கப்பட்டது! தங்கம் மெதுவாகக் கண்களைத் திறந்தாள். அவள் கண் முன்னுல் ஒரு புகை மண்டலம் தோற்றுவது போல் காணப்பட்டது. எதிரே நின்ற உருவங்கள் எல்லாம் நீரிலே தெரியும் உருவம்போல சலசலத்துத் தோன்றின. தங்கம் கண்ணை இமைத்து அகலத் திறந்தாள்.

அதோ... டாக்டர்...நர்சுகள்...... மருத்துவப் பணியாளர்கள்...அவர்கள் அனைவருக்கும் பின்னுல்...... தங்கத்தின் கணவன்!

தங்கம் அவனிடம் ஓடினுள். "என்னங்க...என் கண்கள் தெரியுதுங்க...நல்லா தெரியுதுங்க!...... என் கண்மணியைப் பார்க்கணுங்க...வர்ங்க குடிசைக்கு!...... வாங்க குடிசைக்கு!..." என்ருள்.

அவளது கணவன் மௌனமாக அவளைப் பின் தொடர்ந்தான்.

●

குடிசைக்குள் புதுத் தெம்புடன் வேகமாக நுழைந்தாள் தங்கம்!

தொட்டிலை நோக்கி ஓடினுள்— "கண்ணே...உன் அம்மா வந்துட்டேண்டி..."என்று மகிழ்ச்சியால் கத்திக்கொன்டே ஓடினுள், குழந்தையை வாரி அணைத்து முத்தமிட.

ஆனுல்... வெறும் தொட்டில் தான் தொங்கிக் கொண்டிருந்தது அங்கே!

தங்கத்தின் கண்கள் அங்கு மிங்கும் பரபரப்புடன் ஓடின! குழந்தையைக் காணவே இல்லை!...

அவளது கணவன் சிலை போல் நின்ருன்.

"ஐயோ!...ஏன் இப்படி நிக்கிறீங்க?...எங்கே குழந்தை? ..." என்று அலறினுள்.

"குழந்தை சுகமான இடத்திற்குப் போய்விட்டது..." என்ருன் அவன் சவதானமாக!...

தங்கம் அலறினுள்!

"ஆமாம்...தங்கம்...பசியும் பட்டினியுமா இங்கே செத்துக்கிட்டிருந்தது அது!... நான் கொலை செய்ய விரும்பலே ... லட்சாதிபதி ஒருத்தருக்கு வித்துட்டேன்!..."

"ஐயோ ..." — தங்கத்திற்கு அதற்கு மேல் வாய் எழவில்லை!

"ஆமா தங்கம்!... குழந்தையும் பிழைச்சான்! அந்தப் பணத்தாலே உன் கண்ணும் கிடைச்சது!..."

"என் கண்கள் கிடைத்து என்ன பலன்? என் கண்மணி போயிற்றே!" — என்ற தங்கத்தின் அலறல் அவள் கணவனின் செவிகளில் விழுவதற்கு முன் அவன் வெளியே போய்விட்டான்!

இப்போது அவனுக்கு நிம்மதி அவளை வாட்டி வதைத்த பொல்லாத பதினைந்து தினங்கள் விடுதலை பெற்று சென்று விட்டதே — என்று!

—சொர்ணம்

## முத்தம்மா..

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

வேளையும் நல்லா நிம்மதியாச் சாப்பிடருேம், மேலும் சினிமா, டிராமா தவறுவதில்லே அவள் எப்படியிருந்தாலும் எங்கிட்டே அன்பாதான் இருக்கிருள்...... ஒழுக்கம் ஒழுக்கமனு எங்களுக்கு உபதேசம் பண்றீங்களே, ஒழுக்கத்தை விட்டாதான் உதவி செய்வேன்னு சொல்ருங்களே, அவங்ககிட்ட போய் உங்க பிரசங்கத்தைச் செய்யுங்களேன் பார்ப்போம்.....ஏழை ஒழுக்கத்தோடு வாழ்ந்தால் வறுமை; ஒழுக்கத்தை விட்டால் ஏச்சு; அப்படித்தானே? ஏழையை வாழவிடாமல் அடிக்கிறதைத் தவிர, உங்கள் ஒழுக்கத்துக்கு வேறென்ன சக்தி இருக்குது?" என்று படப்படப்பாகப் பேசிட்விடு முனியன் வெளியேறினுன்.

முனியனின் பேச்சு நான் தூங்கும்வரை என் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருந்தது......

முத்தம்மாவின் அட்டகாசம் இப்பொழுதும் நடந்துகொண்டு தான் இருக்கிறது. ஆனுல் நான் மட்டும் அதைப் பற்றி யாரிடமும் பேசுவதே இல்லை.

## சுழல்விளக்கு...

[11—ம் பக்கத் தொடர்ச்சி]

தென்னுற்காடு மாவட்டத்தின் வளத்துக்கான இரண்டு நீர்ப்பாசனத் திட்டங்கள் சென்னை அமைச்சரவையிடம் இருந்தன.

மணிமுக்தா நதித் திட்டம்—

குனுகி நதித் திட்டம்—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், குறைந்த செலவே ஆகக்கூடிய இவையும் சேர்க்கப்பட வேண்டும் என்று சென்னை அரசு டெல்லியிடம் பலமாக சிபார்சு செய்தது! எனினும் அவை இரண்டும் நிராகரிக்கப்பட்டு விட்டன!

காரணம்?

"பணவசதி இல்லை" — நீர்ப்பாசன, விசை உதவி மந்திரி கனம் ஜெய சுக்ல ஹாரி மக்கள் சபையில் இப்படி காரணம் சொல்லியிருக்கிருர்! சென்னை அரசின் முகத்திலே கரி பூசி வேடிக்கை பார்க்கிருர்!

இங்குதான் கொஞ்சம் யோசிக்க வேண்டும்!...

415 மைல் நீளம் புதிய கால்வாய் ஒன்றே வெட்டப்படுகிறது, 66 கோடிக்குமேல் செலவில்— அது வடக்கே!

ஒரு மாவட்ட வளர்ச்சிக்கான இரு சிறிய திட்டங்கள் மறுக்கப்படுகின்றன—இது தெற்கே!

இதுதான் இந்திய ஒற்றுமையா?

## புத்தாண்டு நாடகம்...

[8-ம் பக்கம் தொடர்ச்சி]

காகச் சில மணல் நிரப்பிய வாளிகள் சென்னைக் கோட்டையிலே உள்ளன தெரியுமா குருவே?.........முன்பெல்லாம் அவைகளிலே "தீ!" எனப் போட்டிருக்கும்! ஆனுல் அது கூட மாறி "ஆக்" என்று இந்தியிலே எழுதப்பட்டிருக்கிறது! பச்சைத் தமிழர் ஆட்சியிலே தமிழ் எப்படிப் பரவுகிறது பார்த்தீரா? இங்கேயே இந்த நிலையென்ருல் இலங்கையைப்பற்றி வருத்தப்படுவதில் அர்த்தமே யில்லையே குருவே!...

குரு: சிஷ்யா!...

சிஷ்யன்: ஏன் பிரபோ!...

குரு: உனக்கும் இருக்கிறதடா!...

சிஷ்யன்: என்ன இருக்கிறது பிரபோ?...

குரு: மூளை இருக்கிறதடா!... இப்பொழுதுதான் நீ "வடக்கு—தெற்கு" கொள்கையைச் சிறிது சிறிதாகப் புரிந்து கொள்ள ஆரம்பித்திருக்கிருய்! ஆனுல் நாடு போகிற போக்கைப் பார்த்தால்...... எனக்கு ஒன்னும் புரியவில்லை சிஷ்யா! காங்கிரஸ் கட்சி இன்று கலகலத்து வருகிறது!

சின்ன சிஷ்யன்: காங்கிரசின் நிலைகுறித்து கண்ணீர் விடும் குருவே!......நமது நிலையைக் கொஞ்சம் திரும்பிப் பாரீர்! பார் புகழும் பாரதத்தாய் தென்னகத்தின்மீது கருணை காட்டவில்லையே; ஏன்? புத்தாண்டு பிறந்தால் தொல்லை தொலையும்; அல்லல்கள் மறையும்; ஆனந்தம் பொங்குமெனக் கூறுவதுண்டு! ஆனுல் குருவே; மாடு மாதிரி உழைததாலும் மகிழ்ச்சி காண முடியவில்லையே; ஏன்? ஏராளமான பணத்தை 'வரி' யென்ற பெயரால் கொட்டிக் கொடுத்தாலும் பசிப் பிணியின் தொல்லை நீங்கவில்லையே ஏன்?

குரு: தென்னகத்தின் தாசானுதாசர்களே!...

"மாடு மாதரி உழைச்சாலும்!
...பணத்தைக் கொட்டிக்
கொடுத்தாலும்!—
மகிழ்ச்சி காண முடியாதடா
...சின்னசிஷ்யா!"

(எல்லோரும் சேர்ந்து)

மகிழ்ந்து வாழ முடியாதடா...
சின்னத்தம்பி!...நாம்
மகிழ்ந்து வாழ முடியாதடா—
சின்னத்தம்பி!...அது
மாட்டுப் பெட்டி மகிமையடா...
சின்னசிஷ்யா!...அதுதான்
பாரதத்தின் பெருமையடா
சின்ன சிஷ்யா!—
பாரதத்தின் புகழுக்காக சின்ன
சிஷ்யா!...நாம்
பசியால் வாடி மடிவோமடா
சின்னசிஷ்யா!..."

(திரை விழுகிறது)

—"இன்பபுரியான்"

### முரசொலி சந்தா விபரம்

**உள் நாடு**

| | |
|---|---|
| ஆண்டு சந்தா | 8—00 |
| ஆறு மாதம் | 4—50 |

**வெளி நாடு**

| | |
|---|---|
| ஆண்டு சந்தா | 9—00 |
| ஆறு மாதம் | 5—00 |

[சந்தாத்தொகையை மணியார்டர் மூலமோ, கிராஸ் செய்த இந்தியன் போஸ்டல் ஆர்டர் மூலமோ அனுப்பலாம். இலங்கை, மலேயா போன்ற இடத்திலிருந்து கிராஸ் செய்த பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பவேண்டும்.

சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்போது தவருது சந்தா எண்ணைக் குறிப்பிட வேண்டும்.]

## சுழல் விளக்கு

மாறன்

பாலைவனத்திலே பழமுதிர்ச் சோலைகள்!

பட்ட மரத்திலே பழக் கோத்துக்கள்!

நினைத்தாலே இனிக்கிறது! கேட்போர் நெஞ்சிலே தேன் பாய்ச்சும் தித்திப்பான செய்திகள்தான்—என்றாலும் சிந்தித்துப் பார்த்தால் 'இப்படியும் நடக்குமா' என்ற வினாக்குறியும் உடன் எழும்பத்தான் செய்யும்!

சுழல் விளக்கின் பார்வையிலே அலாவுதீனுக்குக் கிடைத்த அற்புத விளக்கேதும் பட்டுவிட்டதா—அல்லது புரா

இந்த நல்ல சந்தர்ப்பத்தில் ராஜஸ்தான் மக்களுக்கு என் வாழ்த்துக்களும், நல்லெண்ணமும் உரித்தாகட்டும்! அரசாங்க நிர்வாகம் காட்டுகின்ற அக்கரையைத்தான் இந்தச் சம்பவம் குறிக்கிறது! வரண்ட பகுதியான ராஜபுதனத்தில் இந்தியாவிலேயே மிகப் பெரிய திட்டத்தின் காரணமாக நீர் பாயப்போகிறது! இந்த நல்ல செயலைத் துவக்கும் நல்ல நாளில் ராஜஸ்தான் மக்களை நான் வாழ்த்துகிறேன்..."

எங்கேயோ ஓடுகின்ற நதி—அதற்கு வெகு தூரத்திற்கு அப்

# கால்வாய் வெட்டுகிறார்கள் அங்கு; கண்ணீரைப் பாய்ச்சுகிறோம் இங்கு!

ணக் கற்பனை பெற்றெடுத்த கற்பக விருட்சமோ, காமதேனுவோதான் தோன்றுகிறதா என்று சந்தேகிக்கிறீர்களா?

இல்லை; இல்லை!

உழைப்பவனின் கைப்பட்ட இடமெல்லாம் தங்கம் விளையும் என்பார்களே; அப்படிக்கூட இல்லை!

ஆனாலும் பாலை நிலத்தைச் சோலைவனமாக மாற்ற முடியும்—பாராளும் பாக்கியம் பெற்றவர்களால்!

பட்ட மரத்திலும் பழம் குலுங்கும்—கொடுங்கோலை விசித்திர சக்திபடைத்த 'மந்திரக் கோலா'க மாற்றிடும் ஆற்றல் படைத்தவர்களால்!

எங்கு இந்த அதிசயத்தக்க காட்சி என்று வியப்பால் விரியும் உங்கள் விழிகளை சுழல் விளக்கின் பக்கம் திருப்புங்கள்!

அதோடு மட்டுமல்ல......

"நீர் இல்லாத ஆற்றுக்கு அணை ஏன்?" என்று வினவும் காமராசரே!

"அணை கட்ட ஆறில்லையே!" எனக் கேட்கும் சுப்பிரமணியனாரே!

உங்கள் பழுதடைந்த பார்வையைக்கூட சுழல் விளக்கின் ஒளியோடு ஓடவிடுங்கள்!

சூன்ய வெளியைச் சுந்தர பூமியாக மாற்றும் 'பகீரதப் பிரயத்தன'த்தைப் பாருங்கள்!

நீர்ப்பாசனத்துக்கான தனிப்பட்ட கால்வாய் என்ற அளவில் உலகிலேயே மிகப் பெரிய திட்டம்!...

வெட்டப்பட்ட கால்வாய் என்ற அளவில் ஆசியாவிலேயே அதிக நீளமான கால்வாய்!...

இந்திய உபகண்டத்தில் இப்படி ஒரு பிர்மாண்டமான திட்டத்தை இந்திய அரசாங்கம் பெருமையோடும் பூரிப்போடும் துவக்கியிருக்கிறது!

"எங்கே" என்று வினவுகிறீர்களா? இங்கல்ல...வழக்கம் போல் அங்குதான்! ராஜபுதனத்து வரண்ட பகுதிகளை வளமாக்கிவிட வேண்டுமே என்ற வற்றாத ஆசையின் விளைவுதான் இந்த 'ராட்சச'த் திட்டம்!

ராஜபுதனத்திலே வரண்ட பகுதிகள் ஏராளம்! பாலைவனத்திலும் கேவலமான பசையற்ற பூமி அது! அதைச் செழிப்பாக்க வேண்டுமே என்ற ஆவல் கொண்டனர், ஆட்சி பீடத்தினர். சுற்றுமுற்றும் பார்த்தனர். 425 மைல்களுக்கு அப்பால் பஞ்சாப் மாநிலத்தில் ஓடிக் கொண்டிருந்த சட்லெஜ் நதி தென்பட்டுவிட்டது; அதோடு 'வடக்கு' என்றால் மட்டும் வாயைத் திறக்கும் 'டெல்லி கஜானா'வும் கண்களில் பட்டுவிட்டது! உடனே திட்டம் ஒன்றும் தீட்டப்பட்டுவிட்டது!

பஞ்சாபிலே சட்லெஜ் நதியைத் தேக்கி அணைக்கட்டு ஒன்று கட்டப்போகிறார்கள். பிறகு நீண்ட தொரு கால்வாய் வெட்டப்போகிறார்கள். அந்தக் கால்வாயின் வழியே சட்லெஜ் நதி 110 மைல் தூரம் பஞ்சாபிலே ஓடி, அதன்பின் ராஜபுதனத்தில் அடி யெடுத்து வைத்து, அங்கு மேலும் 315 மைல்கள் ஓடி, கடைசியில் வரண்ட பகுதிக்குப் பாயும்! இப்படி வலுக்கட்டாயமாக இத்தனை மைல் தூரம் நீரை இழுத்து வரக்கூடிய திட்டத்தைத் துவக்கிவிட்ட மத்திய சர்க்கார் தருகிற புள்ளி விவரங்கள் இன்னும் அதிசயத்தைத் தருகின்றன!

**இந்தக் கால்வாய்த் திட்டத்தில் 50 ஆயிரம் பேர்களுக்கு வேலை கிடைக்கும்!**

**670 கோடி கன அடி மண் வெட்டி எடுக்கப்படும்!**

**அணைக்கட்டு செலவு நீங்க, இந்தக் கால்வாய் வெட்டுவதற்கு மாத்திரம் 66 கோடி 50 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு விட்டது!**

பொட்டல் காடும் புழுதி மேடுமாக இருந்த ராஜஸ்தான் பாலை நிலம் விழிகளுக்கு விருந்தாகும் சுந்தரச் சோலையாக மாறுகிறது, பலகோடி வெள்ளிப் பணங்கள் எருவாகக் குவிவதால்!

திட்டத்தை வரவேற்று பாபு ராசேந்திர பிரசாத் இப்படிப் பூரிப்போடு பேசியிருக்கிறார்:

"கால்வாய் வெட்டத் துவங்கும் பால் கிடக்கின்ற வரண்ட பூமி—இரண்டையும் இணைக்க உலகிலேயே பெரிய கால்வாய்—இந்திய சர்க்காரின் இந்த அபார சாதனையைப் போற்றத்தான் வேண்டும்!

பாலைவனத்திலே பழமுதிர்ச் சோலைகள்!

பட்டமரத்திலே பழக் கொத்துகள்!

அந்த முயற்சிக்கு 66 கோடி ரூபாய் செலவு!

ஆனால்...'இந்தியா ஒன்று தானே' என்று இணைப்புத் தத்துவம் பேசுகின்ற 'மாய்மாலக்காரர்'களின் விழிகள் தெற்கே திரும்பவில்லையே! சாதனை புரிபவர்களின் கண்களிலே இங்குள்ள வேதனை புரியவில்லையே!

தங்க நிற மணிக் கற்றைகளை தலையிலே சுமந்தாடும் நஞ்சை நிலத்தின் பண்பும்—மண்ணிலே 'பொன்' விளைக்கும் புஞ்சையின் பாங்கும் இருந்தென்ன?

இங்கே வறுமை—வரட்சி!

அதைப்போலவே கொலுவீற்றிருப்போரின் இரும்பு நெஞ்சத்திலே 'இன உணர்வி'ன் வரட்சி!

அந்த வரட்சியின் காரணமாகவே தெற்கின் வளத்திற்கான திட்டங்கள் தூக்கி எறியப்படுகின்ற சோகச் செய்திகள் பழுக்கக் காய்ச்சிய ஈயம் போல் நம் செவிகளைத் தாக்குகின்றன!

[தொடர்ச்சி பக்கம்—10]


கர்நாடக தி. மு. கழக 2-வது மாநாடு

1958, ஏப்ரல் 26, 27-ம் நாட்களில்

பெங்களூர் சிட்டி, சுபாஷ் நகர்,

கோலார் தங்கவயல் சின்னராசன் திடலில்

கலைவாணர் என். எஸ். கே. அரங்கில்

நடைபெறும்.

தலைவர்: டாக்டர் சத்தியவாணிமுத்து எம். எல். ஏ.

திறப்பாளர்: நடிகமணி டி. வி. நாராயணசாமி

அறிஞர் அண்ணா

பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன்

மற்றும் கழக முன்னணி வீரர்கள் கலந்துகொள்வர்.

பதிவு எண்: 6477 முரசு: 5 ஒலி: 1 16 புதிய காசு


# 'முரசொலி'யின் நான்காண்டு டைரி!



மும்முனை போராட்டத்தின் விளைவாக ஆச்சாரியாரின் குல தர்மக் கல்வித் திட்டம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டது.



ஜீவானந்தம் சம்பராமாயணப் பிரச்சாரகரானார்!



'பச்சைத் துரோகி'யோடு 'பச்சைத் தமிழர்' பட்டத்துக்கு வந்தார்.



ஆவடியிலே மாநாடு கூட்டப்பட்டு ஆயிரக்கணக்கில் இட்லி சுடுவது பற்றியும்; சோஷலிச பாணி பற்றியும் விளக்கம் தரப்பட்டது.




பிப்ரவரி 20 அன்று நமது சக்தியை உலகமறிந்தது.

சங்கரலிங்கனாரின் மரணமும் அவர்கள் மனதை மாற்றவில்லை.





திருச்சி மாநாட்டில் வரலாற்று முக்கியம் வாய்ந்த தேர்தல் நுழைவுத் தீர்மானம்!



பலமான எதிர்க் கட்சியாக தேர்தலிலே நமது வெற்றி!



பெரியார் ஏணியை பச்சைத் தமிழர் பகிரங்கமாக உதறித் தள்ளினார்.



ஹங்கேரியிலே ஸ்டாலின் மகத்துவம் மண்ணாயிற்று; ஜனவரி 6-ல் பஞ்சசீலப் பண்டிதருக்கும் அந்த கதி இங்கு ஏற்பட்டது!

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, தமிழ்நாடு, சென்னை-6